12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 26-11-1978 | இதழ் — 11

வாழ்க அந்த அஞ்சா நெஞ்சம்!

கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

கப்பலோட்டிய தமிழன் தீரர் சிதம்பரனார் மறைந்து நாற்பதாண்டுகளுக்கு மேலே ஓடிவிட்டதை நினைவு கூர்ந்திடும் நாள் நவம்பர் பதினெட்டாம் நாளாகும். அந்நிய ஆதிபத்தியத்தின் அச்சாணியை முறித்து — அடிமை விலங்கை ஒடித்து உரிமைக் குரல் எழுப்ப அரிமா எனக் கிளம்பிய அந்தவீரமனிதர், சிறைச்சாலையில் சித்ரவதைகளை ஏற்றுக்கொண்டு செக்கிழுத்தார், என்பதைச் செங்குருதி சூடேறப் படித்திருக்கிறோம். அந்த உத்தமத் தியாகி இழுத்த செக்கு எங்கிருக்கிறது எனத்தேடி, அதனைக் கொண்டு வந்து சென்னை அரசினர் தோட்டத்தில் கழக அரசின் காலத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது. இன்றைக்கும் அவர் இழுத்த அந்தச் செக்கினைக் காணும்போது வரலாற்றின் தியாக முழக்கம் நம் செவிகளில் ஆங்காரமாக ஒலித்திடவே செய்கிறது.

இந்திய நாட்டு விடுதலைப் போரின் மற்றொரு பாசறையாக சுதேசி இயக்கம் உருவெடுத்து, அந்நியப் பொருள்களைப் பயன்படுத்துவதை அறவே புறக்கணிக்க வேண்டுமென்று போர் முரசு கொட்டியது.

அந்தப்போர்ப் பரணிக்குச் செயல் வடிவம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுத்தான் சுதேசிக் கப்பல்களை ஓட்டுகிற நிறுவனத்தைத் தொடங்கிக் 'கப்பலோட்டிய தமிழன்' என்றசிறப்பினையும் பெற்றார் சிதம்பரனார். இதன் விளைவாக ஆங்கில ஆதிக்கக் காரர்களின் ஆத்திரத்துக்கு ஆளானார்.

நேரம் பார்த்திருந்த அந்த ஏகாதிபத்தியம், கலெக்டர் விஞ்ச்துரையின் வாயிலாகத் தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டது.

தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும், தடையை மீறி ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினார்கள் என்று குற்றம் சுமத்தி, அதன் தொடர்பாக ''ராஜத் துவேஷ' வழக்கொன்றும் ஜோடனை செய்யப்பட்டது.

அந்த வழக்கில் சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சுப்பிரமணிய சிவாவுக்குப் பத்து ஆண்டு தண்டனை அளிக்கப்பட்டது. சிதம்பரனார் சார்பில் மேல் முறையீடு செய்து கொள்ளப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனைக் காலம் அவருக்குப் பத்து ஆண்டுத் தண்டனைக் காலமாக மாற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை வைத்துத்தான் பாரதியார் இரு பாடல்களை உணர்ச்சி பொங்கிட எழுதினார்.

விஞ்ச் துரையும், வீரர் சிதம்பரனாரும் வாக்கு வாதம் செய்வதுபோன்ற பாடல் அது. அதில் சில வரிகளைமட்டும் நினைவூட்டுகிறேன்.

''நாட்டிலெங்கும் சுதந்தர வாஞ்சையை
நாட்டினாய்; கனல் மூட்டினாய்
வாட்டி உன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன், வலி காட்டுவேன்."

–இப்படி நெஞ்சுயர்த்திப் பேசுகிறான், நஞ்சனைய விஞ்ச்துரை.

அதற்குச் சிதம்பரனார் சீறியெழுந்து சொன்ன பதில் என்ன தெரியுமா?

பாரதியின் வாயாலேயே கேட்போம்:

''சதையைத் துண்டு துண்டாக்கினும் என் எண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதயத்துக்குள்ளே இலங்கு மகாசக்தி
ஏகுமோ? நெஞ்சம் வேகுமோ?

—இவ்வாறு வேங்கைப் புலியென உறுமி, இந்திய நாட்டின் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்திய அந்தச் செம்மல், நாடு விடுதலை பெற்ற காட்சியைக் காண முடியாவிட்டாலும் — அவரைப் போன்ற தியாக வேந்தர்கள் சிந்திய ரத்தமும், ஏற்றுக் கொண்ட அடக்கு முறையும்தான் சுதந்திரப் பயிர் முளைக்க உரமாக விளங்கின என்பதைச்சரித்திரம் கம்பீரமாக இசைத்துக் கொண்டுதானிருக்கிறது.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது அண்ணா அவர்களின் முயற்சியால், சிதம்பரனாரின் சிலை சென்னைத் துறைமுகத்தருகே மாநாகராட்சி சார்பில் அமைக்கப்பட்டது.

தூத்துக்குடித் துறைமுகத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியப் பிரதமர் அவர்கள் சிதம்பரனாரின் சிலையைத் திறந்து வைத்தார்கள்.

சென்னை 'ஜார்ஜ் டவுன்' சிதம்பரனார் நகர் என்று பெயர் மாற்றம் செய்யப்படும் என்று கழக அரசின் காலத்திலேயே அறிவிக்கப்பட்டது.

சென்னை இராஜாஜி மண்டபத்தில் உள்ள வெள்ளையர் படங்களை அகற்றிவிட்டு நம் நாட்டுச் சான்றோர் படங்களை வைத்தபோது சிதம்பரனார் படமும் அதில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

சிதம்பரனார் நினைவாக இன்னும் எத்தனை சின்னங்கள் எழுந்தாலும், அவை அவர் காட்டிய தீரத்

(தொடர்ச்சி 12 ம் பக்கம்)

சிவப்பு விளக்குச் சாமியார்!

"உங்களை யார் பகவானாக நியமித்தது?"

கொதிப்படைந்த ஒரு சீடனின் கேள்வி இது.

"பகவான்கள் பிறக்கிறார்கள்
அவர்கள் நியமனம் செய்யப்படுவதில்லை."

காமம் நிறைந்த கண்களை மூடிக் கொண்டு மொட்டைத் தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டு தனது ஆர்ப்பொலியுடன் பதிலளிக்கிறார் குருநாதர்.

மராட்டிய மாநிலத்தின் புனா நகரிலுள்ள கார்ேகான் பூங்காவில் அமைந்துள்ளது ஒரு ஆஸரமம். கோடிக்கணக்கான ரூபாயைக் கொட்டி அகண்ட குதூகலமான மர்ம மாளிகையாக அது உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு காற்று வரைப்பட்ட அறைகளும் உண்டு.

இந்த மர்ம மாளிகைதான் ஆஸரமம் என்று அழைக்கப்படுகிறது. ஊழ் சார்ந்த ஆன்ம இயலான சமய வினையோடு உடலுறவு மூலமாக கடவுள் தன்மை அடைவதே இலட்சியமாகும், இந்தப் புதுமையான முறை மூலம் கடவுள் நிலை அடைய முடியும் என்று அறிவித்து ஆர்ப்பாட்டம் செய்து வருபவரே போலித் துறவி ராஜனீஸ். மனக்குலைவுக்கொண்ட கோணல் போக்குடைய இளமையும், அழகும் இணைந்த ஆண்களும்; பெண்களும் ஐரோப்பாவிலிருந்து இந்த ஆஸரமத்திற்கு வந்து தங்கியிருக்கிறார்கள்.

இந்திய மக்கள் எந்தச் சமயங்களைச் சார்ந்தவர்களாகயிருப்பினும் போலித் துறவி ராஜனீசின் நடவடிக்கைகளை கூர்ந்து நோக்குகிறார்கள், வெறுக்கிறார்கள். அவரது காமக் களியாட்ட நடவடிக்கைகளைக் கண்டு கடுமையாகச் சாடுகிறார்கள்.

மதங்களிலே இவர் ஒரு தொழு நோயாளியாக எண்ணப்படுகிறார். காமக் களியாட்டத்தின் கதா நாயகனாகக் கருதப்படுகிறார்.

ராஜ்னீசுக்கு மதமில்லை. நாட்டின் எல்லைகளை ஏற்பதில்லை. நான் இந்து மதத்தவனுமல்ல. எந்த மதத்தையும் சார்ந்தவனில்லை. என்கிறார் நாட்டின் மீது நம்பிக்கையில்லையாம்.

இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் என்று சொல்லிக் கொள்ளும் இந்த மனிதர் காமக் களியாட்டத்தில் கடவுளை அடைய முடியும் என்று புதிய வியாக்கியானத்தைப் போதிக்கிறார். இந்தச்சிவப்பு விளக்கு ஆஸ்ரம சாமியார்.

அரசியல் வாதிகளை வெறுக்கும் இந்த மோசடிப் பேர்வழி 'மூன்றாந்தர மனிதர்களும், முட்டாள்களுமே அரசியலில் நுழைகிறார்கள் என்று அரசியல் வாதிகளை அசிங்கமாக விமர்சிக்கிறார். ஆனால் இந்திராவை மட்டும் பிடிக்குமாம்! இது என்ன தகிடுதத்தமோ ஆஸரமத்தின் வாயிலில் அரசியல்வாதிகளும் நாய்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்'' என்று எழுதப்பட்ட பலகையை தொங்க விடும்படி தனது சீடரிடம் கூறுவதாக சொல்லப்படுகிறது.

''ராஜனீஸ் புதுயுக பகவான்'' இப்படி அவரது சீடகோடிகள் கூறுகிறார்கள். அவரது ஆஸ்ரமத்தில் ஜெர்மனி பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான இளம் அழகிகள் அடைந்துகிடக்கிறார்கள். அந்த மர்மக் கூடத்தில் சில சந்தேகத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த மர்ம மாளிகையில் எவரும் எட்டிக் கூட பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை.

ஆஸரமவாசி ராஜனீஸ் ஆடம்பரமான வாழ்க்கையில் புரண்டு கொண்டிருக்கிறார். காண்பவரைக் கவரத்தக்க ஆடைகளை அணிகிறார், தானியங்கும் காற்று வரைப்பட்ட விலையுயர்ந்தமெர்சிடஸ்காரை சொந்தத்தில் வாங்கி பயன்படுத்தி வருகிறார்.

சிவப்புவிளக்கு வியாபாரத்தின் மொத்த குத்தகையாளராக விளக்கிடும் ராஜ்னீஸ் சமுதாயத்தின் ஒரு தொழு நோயாளி: சமுதாயமண்ணில் பாய்ந்தோடும் ஒரு சாக்கடை நீரோடை.

இன்றைய சமுதாய அமைப்பைச்சீரழிக்கும் புற்று நோய் இந்த ராஜ்னீஸ். இவரது நடவடிக்கை தடுத்து நிறுத்தப்படவேண்டும். இந்தக் காமக்களியாட்ட மடத்தின் கதவுகள் நிரந்தரமாகப் பூட்டப்படவேண்டும்.

காமக்களியாட்ட பயிற்சியின் மூலமாக கடவுள் நிலை அடைய முடியும்என்றுபொது மக்களை ஏமாற்றிவரும் எத்தன் ராஜ்னீஸ் சமுதாயத்தின் விஷப்புழு ஆவார்,

தந்தை பெரியாரின் அரை நூற்றாண்டுக்கும் மேலான பகுத்தறிவுப் பிரச்சாரம் தென்னகத்தில் விளைவித்தபயன்வட புலத்தை அடையவில்லை. காரணம் வடநாட்டு ஏடுகள் ஒட்டு மொத்தமாக பெரியாரின் பிரச்சாரத்தைஇருட்டடிப்புச் செய்துவிட்டன. இதன்விளைவே இப்படிப்பட்ட போலிச் சாமியார் ராஜ்னீசுகள் தோன்றுகிறார்கள்.

மத்திய அரசும், மாநிலஅரசும் ஒருங்கிணைந்து இப்படிப்பட்ட ஆஸ்ரமம் நடப்பதை அடியோடு ஒழிக்க வேண்டும். ஆடம்பர சிவப்பு விளக்குகள் இப்படிப்பட்ட ஆஸ்ரமங்களின் மூலமாக தலைவிரித்து ஆடுவதை உடனே தடுத்து நிறுத்தவேண்டும்.

முன்னேற்றப் பாதையின் முட்டுக்கட்டையாக, முடை நாற்றம்வீசுகின்றமூடப்பழக்க வழக்கத்தின் முன்னோடியாக இப்படிப்பட்ட ஆஸ்ரமங்கள் திகழ்கின்றன.

வறுமை தாண்டவமாடும் இம்மண்ணில். பட்டினி பிரவேசிக்கும் இப்பூமியில் இப்படிப்பட்ட மோசடி ஆஸரமங்கள் விளங்கினால் சோசலிசம் பூப்பது எங்கே? பொதுவுடைமைமலர்வது எப்போது?

- சி. க.

இனத்தில் தாழ்ந்தவனும் இந்தியன்

கூறுகிறது தென்னாப்பிரிக்க அரசு!

ஏ. எஸ். மூர்த்தி

மகாத்மா காந்தி இறந்து முப்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்திய அரசியலில் அடியெடுத்து வைப்பதற்கு முன்னரே, அவர்தான், தென்னாப்பிரிக்காவில் வாழும் வெள்ளையரல்லாதாருக்கு இழைக்கப்படு! கொடுமைகள் கண்டு குமுறியெழுந்த முதல் மனிதர் தோல் வெளுப்பாக இல்லாத காரணத்தால் காந்தியும் பிற இந்தியர்களும், தென்னாப்பிரிக்காவில் அனுபவித்த அவமானங்களும். துயரங்களும் கொஞ்சநஞ்சமல்ல. தமது அற வழி எதிர்ப்புக்களின் மூலம். இனவெறிக் கொடுமையை, உலகப் பிரச்னைகளுள் ஒன்றாக ஆக்கி உலக மக்களின் உணர்வினைத் தட்டியெழுப்பிய பெருமை காந்தியையே சாரும்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தி வெடித்த முதல் சாத்விகப் போராட்ட வெடிகுண்டு, அநீதியை நோக்கி மக்களின் கவனத்தைத் திருப்பிற்று.

அது நடைபெற்று அறுபது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது என்றாலும், 1978–நவம்பர் மாதத்தில், 'ஜொஹன்ஸ்பர்க்கிலுள்ள மே பேர் மாவட்டத்தில் உள்ள நூறு இந்தியக் குடும்பங்களுக்கு அந்த இடத்தை விட்டுக் காலி செய்யுமாறு போலீசிலிருந்து 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டுள்ளது. ஏனெனில் ஜொஹன்ஸ்பர்க் நகரில் தாழ்ந்த இன மக்கள் வாழ அனுமதிக்கப்பட மாட்டார்கள். அது ஒரு 'வெள்ளைப் பிராந்தியம்' என்று பத்திரிகைச் செய்தி வெளியாகியுள்ளது.

மகாத்மா காந்தி துவக்கிய போராட்டத்தினால், எந்த விதப் பலனும் இத்தனை ஆண்டுக்காலமாக ஏற்படவில்லையா?

மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் கூற முடியாது. தென்னாப்பிரிக்க இனவெறி ஆட்சியில் ஒடுக்கு முறைகள் முன்னைக் காட்டிலும் தீவிரமடைந்துள்ளன; அதேபோல, விடுதலை அடைவதற்கான மக்களின் உறுதிப்பாடும், தீர்மானமும், முன்னைக் காட்டிலும் உரம் பெற்று ஓங்கி உயர்ந்துள்ளது.

சென்ற சில ஆண்டுகளில் மட்டும் என்பதுலட்சத்திற்கும் அதிகமான ஆப்பிரிக்க இந்தியர்களும், பிற இனத்தவரும் "வெள்ளைப் பிராந்தியங்களிலிருந்து'' அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர்,

ஆப்பிரிக்கக் கண்டம் முழுமைக்குமே இன்று தென்னாப்பிரிக்க அரசு ஒரு சவாலாக உள்ளது. இந்த ஆட்சி நீடிப்பதே, சர்வதேசப்பதற்றத்தை உருவாக்கி யுத்த அபாயத்தைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருப்பதால், மகக்ள் இந்தச் சவாலை திரமுடன் ஏற்றுள்ளனர்.

அந்தக் காலத்தில்; காந்தி போராடிய காலத்தில் ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதுமே ஏதேனும் ஒரு ஏகாதிபத்திய அரசின் காலனியாக விளங்கிற்று. ஆனால், இன்றோ, தென்னாப்பிரிக்க அரசும். அதன் மற்றொரு கூட்டாளியான ரொடீசியாவும் தவிர, பிற எல்லா நாடுகளும் விடுதலை பெற்று விட்டன. சிம்பாட்வே நமீபியா, தென்னாப்பிரிக்க மக்களின் தேச விடுதலை இயக்கங்கள். கனன்று எழுந்து, இப்பகுதியில் சக்தி வாய்ந்த அம்சங்களாகத் திகழ்கின்றன.

மேலைய அரசுகள், தங்களது ஏகபோக நலன்களைக் காத்துக் கொள்வதற்காக, இனவெறி ஆட்சிகளுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிரா விட்டால் இதற்குள்ளாக மக்கள் எழுச்சி எனும் சூறாவளிக் காற்று அந்த இனவெறி பிடித்த பாசிஸடு ஆட்சிகளை என்றோ தென் அட்லாண்டிக் கடலிலும்இந்துமாக்கடலிலும் தூக்கி எறிந்திருக்கும்.

ஐ. நா. வின் ஆணைகளையும் உலக மக்களின் விருப்பங்களையும் சற்றும் மதிக்காமல் சில வேளைகளில் பகிரங்கமாகவும் பல சந்தர்ப்பங்களில் மறைமுகமாகவும் மேலைய அரசுகள் இனவெறி ஆட்சியாளர்களுக்குத் துணைபோகின்றன.

ஆனால் இனியும் இனவெறிக் கொடுமைகளையும் நிறத் திமிரையும் தொடர்ந்து சகித்துக்கொண்டிருக்க மக்கள் தயாராக இல்லை.

அதிலும் அக்கொடுமைக்கு எதிராக முதன் முதல் குரல் கொடுத்த உத்தமர் காந்தியைத் தலைவராகக்கொண் கொண்டிருந்த இந்திய நாடு அக்கொடுமையை உலகிலிருந்தே துடைத்தெறிய விரும்புகிறது. கறுப்பு ஆப்பிரிக்க மக்களின் உத்வேகமான ஆக்ரோஷமான போராட்டத்தைக் காணும்போது இந்தியாவின் விருப்பம் நிறைவேறும் நாள் தூரத்திலில்லை என்பது தெளிவாகிறது மேலைய நாடுகளின் பணபலமோ அல்லது அவை கடைப்பிடிக்கும் ராஜதந்திர வித்தைகளோ இனித் தென்னாப்பிரிக்க அரசைக் காப்பாற்ற முடியாது.

[சோவியத்து வெளியீட்டில் வந்த கட்டுரை]

முப்பத்தெட்டிலே மூண்ட மொழிப்போர்

(சென்ற இதழ தொடர்ச்சி)

தந்தை பெரியார்அவர்கள்இந்தி எதிர்ப்பு அறப்போரையொட்டிக் கைதாகி சென்னைச் சிறையில் இருந்தபோது 1938ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30 ஆகிய நாட்களில் நீதிக் கட்சியின் 14 வது மாகாண மாநாடு சென்னையில் நடைபெற்றது.

மாநாட்டையொட்டி நடைபெற்ற ஊர் வலத்தில் தந்தை பெரியார் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது,

சிறைக் கம்பிகளுக்குள்ளே பெரியார் அடைக்கப்பட்டிருப்பது போன்று சித்தரிக்கப்பட்டிருந்த காட்சியும் தமிழ்த்தாயின் கையில்விலங்கு பூட்டப்பட்டிருப்பது போன்ற காட்சியும் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தன.

தலைவர் பெரியார் இல்லாமலே மாநாடு நடைபெற நேர்ந்ததால், பெரியாருக்குப்பதில் சர் ஏ. டி. பன்னீர்செல்வம் மாநாட்டுக்குத் தலைமை ஏற்றார்.

அப்போது திரு. பன்னீர்செல்வம் அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட மாலையைக்கழற்றி "எனது தோளுக்கு இட்ட மாலையைத் தலைவர் பெரியாரின் தாளுக்கு இடுகிறேன்." என்று கூறி, பெரியாரின் சிலைக்கு அணிவித்தார். அந்தக் காட்சி கூடியிருந்த அனைவரையும் கண்ணீர் மல்கச் செய்தது.

மாநாட்டுத் தலைமையுரையை முன் கூட்டியே பெரியார் அவர்கள் எழுதி வைத்திருந்ததால் அந்த உரையைத் திரு. பன்னீர்செல்வம் படித்தார். பின்னர் சர், ஏ.டி.பி. அவர்கள் ஆற்றிய வீரஞ்செறிந்த உரை

பெரியார் அடைபட்டிருந்த சிறையை இடித்துத்தள்ளிப் பெரியாரை மீட்பது போன்று இருந்தது.

நீதிக்கட்சி வரலாற்றில் இந்த மாநாடு மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தாளமுத்து—நடராசன் களபலி

கண்ணீரும் செந்நீரும் சிந்தியே நமது இயக்கத்தை இன்று இந்த அளவுக்கு வளர்த்திருக்கிறோம். பல தொண்டர்களைக் களபலி கொடுத்து வளர்ந்துள்ள திராவிட இயக்கத்தின் தியாகிகள் பட்டியல் நீண்டு கொண்டே வந்திருக்கிறது. அந்தப் பட்டியலில் முதலிடத்தையும் இரண்டாம் இடத்தையும் பெற்றவர்கள் தாளமுத்து – நடராசன் என்னும் இரண்டு இளைஞர்களேயாவர். தாளமுத்து — நடராசனிலிருந்து தொடங்கிய பட்டியல்தான் இன்று மதுரை இளஞ்செழியனுடன் முடிந்திருக்கிறது.

1938 ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பில் பங்கேற்றுச் சிறையிலிருந்தபோதுதான் தாளமுத்துவும் நடராசனும் மாண்டார்கள்.

அதே போலதான், 1962-ல் நடைபெற்ற விலைவாசி கண்டன அறப்போரில் ஈடுபட்டுச் சிறையிலிருந்த சிங்கங்களான சென்னைத் தோழர் கோ.சு. மணியும், திருவில்லிப்புத்தூர் பொற்செழியனும் மாண்டார்கள்.

அதேபோல இந்திராகாந்தியின் மிசாச் சட்டத்தின்படி சிறையிலிருந்தபோது சிட்டிபாபுவும் சாத்தூர் பாலகிருஷ்ணனும் சிறையிலே மாண்டார்கள்.

இப்படி மூன்று முறை நமது இயக்கத்தைச் சேர்ந்த ஆறு இளஞ்சிங்கங்களை பலி கொண்டிருக்கிறது தமிழ்நாட்டுச் சிறைச்சாலை.

சென்னையைச் சேர்ந்த இளைஞர் நடராசன் ஏழைகுடும்பத்தில் பிறந்தவர். தமது தாய் தந்தையரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் இருந்தவர். அவர் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுச் சிறைசென்றார். சிறையிலே நோய் வாய்ப்பட்டு விட்டார். அப்போது அவரிடம் "மன்னிப்புக் கேட்டு எழுதிக் கொடுத்தால் விடுதலை செய்து விடுகிறோம்" என்றுசொல்லச் சொன்னார் முதலமைச்சர் ஆச்சசரியார்.

ஆனால் அதற்கு இசையவில்லை அந்தவீரத் தமிழ் மகன். உயிரைவிடத் தாய் மொழி பெரிது என்ற உறுதியுடனிருந்த அவன் நோய் முற்றிச் சிறையிலேயே உயிரை விட்டான்.

குடந்தையைச் சேர்ந்த தாளமுத்துவும் சிறையிலே நோய் கண்டு அவதிப்பட்டான். அவனும் மன்னிப்பு எழுதிக்கொடுக்க மறுத்து விட்டான். அவனும் சிறையிலேயே மரள நேரிட்டது.

அவனது மனைவி மக்களெல்லாம்குடும்பத் தலைவனை இழந்து தவித்தனர்.

இந்த இரு வீரர்களும் மாண்ட செய்தி கேட்டுத் தமிழகமே துக்கத்தில் ஆழ்ந்தது' தமிழ் உள்ளங்களெல்லாம் பதறின; கதறின!

சிறையிலே மாண்ட வீரர்களின் சவ ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்றனர்;

சவ ஊர்வலத்தின்போது, வட நாட்டு வணிகர்கள் பெரும்பாலோர் வாழும் பகுதியான சௌகார் பேட்டையிலுள்ள கடைகளெல்லாம் மூடப்பட்டிருந்தன. வீடுகளும் அடைக்கப்பட்டிருந்தன. வடநாட்டவர் பலர் ஊரைவிட்டே ஓடிவிட்டனர்.

அந்த இரண்டு தியாகிகளின் உடல்களும் சென்னை மூலக்கொத்தளம் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டன. அவர்களின் நினைவுச் சின்னத்தை இன்றும் அங்கே காணலாம்,

பல்லடம் பொன்னுசாமி உண்ணாவிரதம்!

இந்த இந்தி எதிர்ப்பு அறப்போரிலே ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிறை சென்றனர். ஆடவர் மட்டுமின்றி பெண்டிரும் கைக்குழந்தைகளுடன் மறியலில் ஈடுபட்டுச் சிறைசென்றனர். தந்தை பெரியார் பெல்லாரிச் சிறையில் வைக்கப்பட்டார்பல்லடம்பொன்னுசாமி ஆச்சாரியார் வீட்டு முன்.வெட்டவெளியில்உண்ணுநோன்பிருந்தார்; மழை கொட்டியபோதும் அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தவில்லை அவர் உண்ணாவிரதமிருந்த இடத்தில் எதிரிகள் பாம்பைக் கொண்டு வந்து விட்டார்கள். பாம்பு அவர் முன் படம் எடுத்து ஆடியபோதும் அஞ்சாமல் படுத்த இடத்திலிருந்து நகராமல் இருந்தார். அவரை போலீசார் அவர் படுத்திருந்த கட்டிலுடன் தூக்கி வண்டியில் வைத்துக் கொண்டு சென்றனர் – சிறையிலும் அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தவில்லை

மா. செ.

சிறை அதிகாரிகள் அவர் வாயில் பலாத்காரமாக உணவைச் செலுத்த முயன்றனர். கிடுக்கியைவைத்துக் கிட்டிப்போயிருந்த அவர் பற்களை விலக்கி, உணவு செலுத்தியபோது, அவருடைய நாக்குப் பிளவுண்டுவிட்டது. இதனால் அவர் சிறிது காலம் சரியாகப் பேச முடியாமல் இருந்தார்

மறியல் தொண்டர்களைப் போலீசார் அடித்து அடித்துத் துரத்துவர். சிறையில் இடமில்லாததால், மறியல் தொண்டர்களைக் கைது செய்யாமலே விரட்டியடிப்பர். மீண்டும் மீண்டும் தொண்டர்கள் திரும்பிவந்து மறியலில்ஈடுபடுவர். வேறு வழியில்லாமல் அவர்களைப் போலீசார் கைது செய்து அழைத்துச் செல்வர்

சிறையில் இருந்த இந்திஎதிர்ப்புத்தொண்டர்களிடம் கட்டாயமாக மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்குவதிலும் சிறை அதிகாரிகள் ஈடுபட்டனர். இத்தனைக்கும் ஈடுகொடுத்துத்தான் அன்றைய இந்தி எதிர்ப்பு இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்றது,

சட்டமன்றத்தில் கேள்விக் கணைகள்!

அப்போது, சட்டமன்றத்தில்எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சர். எ. டி. பன்னீர் செல்வமும், மற்றவர்களும் முதலமைச்சர் ஆச்சாரியாரைக் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்தனர்

தள்ளாத வயதில் பெரியார்அவர்களை வெப்பம் மிகுந்த பெல்லாரிச் சிறைக்கு அனுப்பியது என்? என்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு ஆச்சாரியார் "நாயக்கரின் உடல்நிலை பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் அவருடையஉடம்புக்கு பெல்லாரிதான் ஏற்றஇடம்" என்று ஆணவமாகப் பதிலளித்தார்.

தாளமுத்துநடராசன் என்னும் இளைஞர்கள் சிறையில் மாண்டது பற்றிக் கேட்ட கேள்விக்கு ஆச்சாரியார் பதிலளிக்கையில் "அவர்கள் இருவரும் படிப்பறிவு இல்லாதவர்கள்; அதனால்தான் சிறையில் மாளநேரிட்டது" என்று கூறினார்

இந்தி எதிர்ப்பு மறியலில் எராளமான தாய்மார்களும் கைக்குழந்தைகளுடன் கலந்து கொண்டு கைதாவதைப்பற்றி ஆச்சாரியார் குறிப்பிடுகையில், "தங்கள் குழந்தைகளுக்குப் பால் கிடைக்காதவர்களெல்லாம் கைதாகிச் சிறைக்குப்போய் அங்கு தாராளமாகப் பால் வாங்கிக்கொடுக்கிறார்கள்' என்றுஏளனமாகக் கூறினார்

இவற்றையெல்லாம் கேட்டுத் தமிழர்கள் குமுறினர். இந்த அநியாயத்துக்கு முடிவு கட்டியே தீரவேண்டும் என்று தன்மானமுள்ள தமிழர்களெல்லாம் பொங்கியெழுந்தனர்.

நாடு முழுவதும் இந்தியை எதிர்த்தும் ஆச்சாரியாரின் ஆணவப் போக்கினைக் கண்டித்தும் குரல் கொடுக்கப்பட்டது. பள்ளிக்கூட மறியல் சென்னையில் மட்டுமின்றி வெளியூர்களிலும் பரவத் தொடங்கியது

ஆச்சாரியாரின் இந்தித் திணிப்பின் எதிரொலியாகவே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் எழுந்தது. சென்னைக் கடற்கரையில் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்தான் முதன் முதலாக, நாவலர் பாரதியார், தமிழ்நாடு தமிழருக்கே என்று முழங்கினார்.

கடைசியாக, வேறு வழியில்லை என்று உணர்ந்ததும், ஆச்சாரியார் ஆட்சி, கட்டாய இந்தியைக் கைவிட்டது. 'இந்திக்கு இவ்வளவு பெரியஎதிர்ப்பு இருக்கும் என்று நான்எண்ணவேயில்லை; நாயக்கர் இப்படிபொரு அமர்க்களத்தைச் செய்வார் என்று நான் நினைத்திருந்தால் இந்தியைக் கொண்டுவந்திருக்கவேமாட்டேன்" எனக் கூறி, ஆச்சாரியார் ஆத்ம திருப்தி' தேடிக் கொண்டார்.

எந்த ஆச்சாரியார் 1938-இல் கட்டாய இந்தியைக் கொண்டு வந்தாரோ அதே ஆச்சாரியார்தான் 1956-இல் இந்தித் திணிப்புக்கு எதிரா்கக் குரல் கொடுத்தார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா உட்பட அனைத்துக் கட்சியினரையும் அழைத்து, நுங்கம்பாக்கத்தில் உள்ள தமிழறிஞர் சுப்பையா என்பவரின் இல்லத்தில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தார். தமிழர்கள் அனைவரும் கட்சி கருத்து வேறுபாடின்றி இந்தியை எதிர்க்க வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில்தான் முடிவு செய்யப்பட்டது.

அதன் பிறகு, ஆச்சாரியார், தமது இறுதி மூச்சுள்ளவரை இந்தியை எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்கங்களான திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தொடர்ந்து இந்தியை எதிர்த்து வருகின்றன

1938-இல் சென்னையில் இந்தி எதிர்ப்பு அறப்போர் நடைபெற்ற போதுதான், பதினான்கு வயதுப் பள்ளி மாணவராக இருந்த நமது கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதிகளிலே கையிலே வில் – கயல் – புலி பொறித்த கொடிஏந்தி, "ஓடிவந்த இந்திபெண்ணே நீ நாடிவந்த நாடு இதுவல்லவே" என்னும் பண்பாடி, இந்தியை எதிர்த்தார். இன்று அதே கலைஞர்தான் இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குத் தலைமைதாங்கி நடத்த இருக்கிறார்.

பாராளுமன்ற எதிரில் ★ ★ பாட்டாளிகள் பேரணி!

"இந்தியப் பாராளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத் தொடர் துவங்கிய 20 11-78ம் நாளன்று பிரம்மாண்டமான பாட்டாளிகள் பேரணி நடைபெற்றது."

இது செய்தி! இந்தச் செய்தியைப் படித்ததும்; வழக்கம் போல தொழிலாளர்கள் ஊர்வலம் வந்துள்ளனர். தொழிலுறவு கூட்டத்தினை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்துள்ளது என்று எவரும் கருதிவிடக் கூடாது, என்பதற்கும், அந்தப் பேரணியில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையும் பங்குபெற்று; நேரிடையாகவே கலந்து கொண்டுள்ளவன் என்கிற வகையில் நடந்தவற்றைத் தொகுத்து விளக்கியுள்ளேன், மத்திய அரசு நாடாளுமன்ற மக்களவையில் கடந்த கூட்டத் தொடரின் இறுதியில் 30—8—78 புதிய தொழிலுறவு மசோதாவைத் தாக்கல் செய்தது! இதனை பொறுப்புக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதாகவும் அறிவிக்கப் பட்டது.

இந்த மசோதாவினை நாடெங்கிலும் உள்ள தொழிற் சங்கங்கள்—தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிலாளர் அமைப்புகளும்— கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளதோடு, மசோதாவைத் திரும்பப் பெறுமாறும் மத்திய அரசினருக்கும் மத்திய தொழிலாளர் அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்தன.

இந்தப் புதிய தொழிலுறவு சட்டம் நன்மை பயக்கத் தக்கதென்று மத்திய தொழிலாளர் அமைச்சர் துவக்கத்தில் கருத்துக்களைத் தெரிவித்தார். அமைச்சரது இந்தக் கூற்று எவ்வகையில் தவறுடையது என்பதனை விளக்கித் தொழிற் சங்கங்கள் தரப்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை சார்பில் நாமும் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டோம்,

தொழிற் தகராறுகள் சட்டம் (1947)
தொழிற் சங்கங்கள் சட்டம் (1926)
நிலை ஆணையர் சட்டம் (1946)

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகிற மேற்கண்ட மூன்றினையும் ஒருங்கிணைத்து "தொழில் உறவுகள் சட்டம்" என்கிற வகையில் புதுப் பெயரில் மசோதா தாக்கலாகியுள்ளதே தவிர, இந்தச் சட்டத்தால் எவ்வகையிலும் நன்மைகள் இல்லை.

இந்தப் புதிய மசோதா "தொழில் அமைதி காத்திட" "தொழில் உறவு நெருங்கி நிலைத்திட" எவ்வகையிலும் உதவிகரமாக அமையவில்லை.

மாறாக, தொழிற் சங்க இயக்கம் சுதந்திரமாகச் செயல்படுவதைத் தடுத்திட வேண்டுமென்ற நோக்கமுடன் பல உட்பிரிவுகள் அமைந்துள்ளன.

ஜனநாயக மரபுகளுக்கு முரணாகவும் சிவில் உரிமைகளைப் பறிப்பதாகவும் அமைந்துள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெரிவிக்கப் பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகளையே தகர்ப்பதாக அமைந்துள்ளது, ஒரு தொழிலில் தொழிற்சாலையில் ஒன்றுக்கு மேற்பட்ட பல சங்கங்கள் இயங்குவதற்குரிய சட்ட பூர்வ முத்திரைகளைத் தருகிறது.

தொழிற்சங்க அங்கீகாரம் குறித்து எந்த வகை ஏற்பாடும் அமையவில்லை. தொழிற்சங்கங்களின் அன்றாட அலுவல்களில் கூட அரசாங்கம் தனது ஆதிக்கத்தைத் திணித்துள்ளது. அரசாங்க இலாக்காக்களிலேயே ஒன்றெனத்தொழிற்சங்கத்தையும் தனது ஆதிக்கத்திற்குட்பட்டு நடத்திட முனைந்துள்ளது,

ஆளுங் கட்சியின் பொறுப்பினை நிர்ணயிப்பதற்கும் ஓர் ஓட்டு உயர்ந்திருந்தால் போதுமென்கிற நடைமுறை நாட்டில் இருந்து வருகிறது. ஆனல் தொழிலாளர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுப்பதற்கு 60 (அறுபது) சத விகிதம் இருந்தாகவேண்டுமென்று வரையறை செய்யப் பட்டுள்ளது.

பிரத்தியட்ச நடைமுறைகளில் சாத்தியமற்ற வகையில் "ஒரு தொழிற் சங்கத்தைப் பதிவு செய்வதற்குப் பத்துச் சத விகிதத்தினர் அல்லது நூறுபேர்" இதில் எது உயர்ந்ததோ அந்த எண்ணிக்கையினர்; அதுவும் அதிகாரிகள் பரிசீலனைக்கு உட்படுத்துகிற நிலையில் மசோதாவின் விதிகள் அமைந்துள்ளன.

நேரிடை நடவடிக்கைகளை சட்ட பூர்வமாகத் தடை செய்வது கூடாது என்று தேசிய லேபர் கமிஷன் அறிக்கை கூறியுள்ளது. இதற்கு முரணாக, தற்போது அறிமுகப்படுத்துகிற புதிய மசோதாவின் சரத்துக்கள் வேலை நிறுத்த உரிமையையே பறிக்கிற வகையில் அமைந்துள்ளன.

ஆர்ப்பாட்டங்கள் கிளர்ச்சிகள் போன்றவை நியாயமற்ற செயல்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலப் போராட்டங்களின் விளைவாக ஏற்பட்ட பலன்களும் அதன் அடிப்படையில் தற்போது தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் அனுபவித்து வரும் உரிமைகளையும் சலுகைகளையும் ஒரேயடியாகப் பறித்துக்கொள்கிற வகையில் மசோதாவின் சரத்துக்கள் அமைந்துள்ளன,

தொழிலுறவு சீராக அமைவதற்குரிய வழியே "இருதரப்புக் கூட்டுப் பேரம்" தான் என்று பல்வேறு நாடுகளிலும் பரவலாக ஒப்புக் கொள்ளப் பட்டு வருகிற இந்தக் கட்டத்தில் அந்தக் கொள்கையின் திசையையே மாற்றுகிறவரையில் புதிய மசோதா அமைந்துள்ளது.

உலகத் தொழிலாளர் அமைப்பு நெறிகளுக்கு முரணானதும்; உலக நாடுகளில் நிராகரிக்கப்பட்டதுமான; இரகசிய வாக்கெடுப்பு அல்லாத இதர முறைகளின்மூலம் தொழிற் சங்கங்கங்களின் உண்மையான உறுப்பினர் கணிப்பையும் அதனை அடுத்த அங்கீகாரத்தின் விளைவையும் எப்படி நியாயப்படுத்த முடியும்? அதிகாரிகள் இது தொடர்பாக எந்த முறைகேடுகளையும் செய்ய வழி இருக்கிறது

எந்தச் சமுதாயத்திலும் முதலாளிகளின் நலன்கள் தொழிலாளர்களுக்கு நேர் எதிராகவே இருக்கும் என்பதை அரசு உணர்ந்து பார்க்கத்தவறி விட்டது.

முதலாளிகளும் — அதிகாரிகளும் எந்தவிதமான பாதிப்புக்கும் ஆளாக்கப் படாமல் தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் மட்டுமே புதிய

★★★★★ ★★★★★★

காட்டூர் கோபால்

★★★★ ★★★★★★★

மசோதாவின் பல்வேறு சரத்துக்களிலான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

விவசாயத் தொழிலாளரோ— வேலையற்றவர்களோ போன்ற சமுதாயத்தின் பிற பகுதியினருக்குக் குறுக்கே அமைப்பு ரீதியிலான தொழிலாளர்கள் தடையாக நிற்கவில்லை; கிராமப்புறங்களில் வேலையற்றோருக்கு முழுவேலை வாய்ப்பினை அளித்திட ஏற்பாடு செய்வது அரசின்கடமையாகும், இதற்குக் காலக்கெடுவுடன் கூடிய தக்க வளர்ச்சித் திட்டங்களை முழுமையாக நிறைவேறுவதன் மூலமே வெற்றியடைய முடியும். அதனை விடுத்து ஏற்கனவே வேலையில் இருந்து வருகிற அமைப்பு ரீதியிலான தொழிலாளர்களது சலுகைகளை — உரிமைகளை ஒடுக்க முற்படுவதால் என்ன பலன் எற்படும்?

புதிய மசோதா—அத்தியாவசியப் பணிகள் என்ற நீண்டதொரு பட்டியலைக் கொண்டதுடன், தேவைப்படும்போது எந்த இதரப் பணியையும் அத்தியாவசியமானது எனப் பிரகடனம் செய்யும் அதிகாரத்தையும் அரசுக்கு வழங்குகிறது.

தொழிற்சங்க நிர்வாகத்தில், வெளியாரின் பங்கு கட்டுப்படுத்தப்படுகிற விதியின் விளைவு எதனைத் தோற்றுவிக்கும்? பொருளாதார ரீதியிலும்—கல்வித்துறையிலும்—கலாச்சாரம் போன்ற பல்வேறுசமுதாயத்துறைகளிலும் இன்னமும் முழுமையயான வளர்ச்சியை எட்டாத நம் நாட்டில், தொழிலாளர்களிடையே இருந்தே தலைமை உருவாக வேண்டுவதற்கு மேலும் காலம் தேவைப்படும்! போதுமான கால அவகாசமின்றி உடனடியாக மாற்றம் செய்ய முற்படுவதன் மூலம் தொழிலாளர் சமுதாயத்தையும் ... தொழிற்சங்க இயக்கத்தையும் வலுவிழக்கச் செய்கிற முயற்சியாகவே அமையும்.

மேற்கண்ட வகைகளில் புதிய தொழிலுறவு மசோதா தொழிலாளர்களது உரிமைகள்— சலுகைகள்— சனநாயக நெறிகள்—ஆகியவற்றைக்கட்டுப்படுத்துவதாகவும் - பறிப்பதாகவும் அமைந்துள்ள கறுப்புச்சட்டமாகும் என்றோம்.

"கறுப்புச் சட்டம்" என்று சிலர் இந்தப் புதிய சட்டத்தைக் கூறுவதற்கு அவர்களது "பழுதுபட்ட பார்வை காரணமே தவிர கண்கோளாறு காரணமே தவிர வேறில்லை" என்று மத்திய தொழிலாளர் அமைச்சர் முதல் கட்டத்தில் தெரிவித்தார்.

ஆனல் இந்தப் புதிய மசோதாவினை எதிர்த்து நாடெங்கிலும் பரவலாக ஆட்சேபனைகள் வலுப் பெறுவதைப் பார்த்து.மத்திய அமைச்சர் சிறிது மாறுதல் பெற்றார்: எந்தெந்த சரத்துக்களைத் திருத்தவேண்டும்? தொழிற்சங்கங்கள் பொறுக்கு குழுவிற்குக் கருத்துக்களைக் கூறட்டும் கவனிக்கலாம்.மாற்றிடலாம் என்று தெரிவித்தார்

மத்திய அரசும் — தொழிலாளர் அமைச்சரும்— இந்தப் புதிய மசோதாவில் தேவையான மாற்றங்களையும்—திருத்தங்களையும்—பொறுக்குக்குழு ஆய்வு மூலம் மேற்கொள்ளும் என்று அடிக்கடியும் தொடர்ந்தும் கூறிவருவதே;—மசோதா குறைபாடு உடையது— மறுபரிசீலனையின் அவசியத்தில் உள்ளது—என்பதனை ஒப்புக் கொள்வதாகும்.

ஆனல் புதிய மசோதாவில் —திருத்தங்கள் — சேர்த்தல்கள் - செய்து கொள்கிற வகையில்சில பல விதிகளில் மாறுதலை மட்டும் நாம் வலியுறுத்தவில்லை! அடிப்படையினையே மாற்றியாக வேண்டும். அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதிகளில் எண்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட விதிகள் மாற்றப்பட்டு, புதிய விதிகள் அமைந்தாக வேண்டும். எனவேதான் வேறு வழியே இல்லை. இந்த மசோதாவினை உடனே திரும்பப் பெறுங்கள் —புதியமசோதாவினை தொழிற் சங்க அமைப்புகளுடன் கலந்து பேசி உருவாக்கிட முற்படுங்கள் —என்று வற்புறுத்தினேம்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை உள்ளிட்டு இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மத்திய தொழிற் சங்க அமைப்புகளுமே புதிய தொழிலுறவு மசோதாவினைத் திரும்பப் பெற்ருக வேண்டுமென்பதனை வலியுறுத்தியுள்ளன.

இதனையொட்டி பம்பாயில் 8 - 10 - 1978 — ஆம் நாளில் அனைத்து மத்திய தொழிற் சங்கங்களும் இணைந்து ஒரு கூட்டம் நடத்தினர்.

புதிய தொழிலுறவு மசோதாவிற்கு எதிரான இயக்கங்களை நடத்துவதெனத் திட்டமிட்டனர்.

முதல்கட்டமாக தொழிலாளர்களை ஒன்று திரட்ட மசோதாவினை எதிர்த்துக் கையெழுத்து இயக்கத்தை நாடெங்கிலும் நடத்துவது—

நவம்பர்19 ல்டெல்லியில் அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கூடி மேற்கொண்டு எடுத்தாக வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றித் தீர்மானிப்பது—

நவம்பர் 20 - ல் நாடாளுமன்றத்தின் முன்பு ஆர்ப்பாட்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் — பெண் கேன்வாசர்கள் தேவை.

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922

தரம்நாடுவோர் தவறாமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு : விற்பனை நிலையம்

92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்

கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை. 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

எம். ஜி. ஆர். நடத்திய 'சஞ்சய்' கூத்து!

ஆங்கில ஏட்டின் படப்பிடிப்பு

தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் ஐந்து வார உலகச் சுற்றுப் பயணத்துக்காக நேற்று இங்கிருந்து புறப்பட்டார். அப்போது விமான நிலையத்தில் நிலவிய காட்சிகள், நெருக்கடி நிலைக் காலத்தை நினைவூட்டுவனவாக அமைந்தன. நூற்றுக்கணக்கான போலீசார்—ஆயுதந்தாங்கியோர் மீனம்பாக்கம் விமான நிலையத்தை வளைத்துக் கொண்டனர். அதே அளவு போலீசார் இராமச்சந்திரன் வந்த வழியிலும் வரிசையாக நின்றனர். அவர் தன் கட்சியால் எச்சரிக்கையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெரும் களியாட்டத்திற்கிடையே இந்தப் பயணத்தைத் துவக்கினார்.

அந்த நடிகர், மேடையில் ஏறிநின்று கையாட்டி-சுமார் மூவாயிரம் பேருள்ள கூட்டத்தைப் பார்த்தார் அவர்களுள் பெரும்பாலோர் போலீசார் அப்போது விமான நிலையத்தில் காணப்பட்ட காட்சிகள், சஞ்சய் காந்தி வந்தபோது நடந்தநிகழ்ச்சிகளை நினைவூட்டுவனவாக அமைந்தன.

இது திறமையாகத் தயாரித்து இயக்கி வைக்கப்பட்ட வழியனுப்புச் சடங்காகும். பற்பல பெண்டிர் மேடையேறினர். அந்தத் தமிழ்த் திரைக் கதாநாயகனுக்கு மாலையணிவித்தனர். அவரது பாதம் தொட்டு வணங்கினர். இதையெல்லாம்வெளிப்படையாக அங்கீகரிப்பவராகவே இராமச்சந்திரன் காணப்பட்டார்.

தேவைக்கு மேலான ஏற்பாடுகளைக் காவல்துறையினர் செய்திருந்தனர்.

அண்மை ஆண்டுகளில் இப்படி ஏதேனும் ஒரு பலமான போலீஸ் காவல் (விமானநிலையத்தில்) காணப்பட்டதென்றால் அது மூன்றாண்டுகளுக்கு முன்பு — நெருக்கடி நிலை நிலவியபோது சென்னைக்கு சஞ்சய் காந்தி வந்தபோதுகாணப்பட்டதுதான்...

பாம்பாய்க்குச் செல்ல வேண்டிய விமானம் புறப்படுவது 45 நிமிட நேரம் தாமதமானது. இதற்குக் காரணம் இராமச்சந்திரனே! அவர் (ஏற்கனவே விமானத்தில் ஏறிவிட்ட) பயணிகளுக்கு ஏற்படும் வசதிக் குறைவைப் பற்றிக் கவலைப்படவில்லை. தனது ரசிகர்களிடமிருந்து அவர் மாலைகளைப் பெற்றுக் கொண்டேயிருந்தார்.பின்னர், விடைபெறும் உரை ஒன்றை சர்வசாதாரணமாக ஆற்றவும் செய்தார்.

முன்னதாக நேற்றைய தினம் திடீரென முன்னேற்பாடின்றி ஒரு செய்தியாளர் கூட்டம் நடந்தது அதில், கண் அறுவைச் சிகிச்சைக்காக தாம் அமெரிக்காசெல்லவில்லை என்று மறுப்புரைத்தார் இராமச்சந்திரன்.

வெளிநாட்டில் உங்கள் சுற்றுப் பயணத் திட்டம் என்ன எனச் செய்தியாளர்கள்கேட்டபோது அதை வெளியிட இராமச்சந்திரன் மறுத்தார். "நிகழ்ச்சி நிரல் இன்னும் வகுக்கப்படவில்லை. நான் அமெரிக்கா போய்ச் சேர்ந்த பின்தான் அதுவகுக்கப்படும்!" என்று மரியாதையின்றிக் கூறினார்.

ஆனால், இங்குள்ள அமெரிக்கத் துணைத் தூதுவராலுவலக வட்டாரம் இதைமறுக்கிறது. "வெகு நாட்களுக்கு முன்னரே பயணத் திட்டம் வகுக்கப்பட்டு விட்டது" என்கிறது.

தன் பெயரை வெளியிட விரும்பாத இந்தத் தூதுவராலுவலக அலுவலர் ஒருவர். "பயணத் திட்டத்தை முடிவு செய்யாமலே யாரையும் அமெரிக்காவுக்கு அழைக்கும் பிரச்சினையே இல்லை! இது எல்லா அரசாங்கங்களாலும் பின்பற்றப்படும் ஒரு நிலையான செயல்முறை!" என்றார்.

வெளிப்படையாக சொல்ல முடியாத காரணம ஒன்றால், தனது அயல் நாட்டுப் பயண விவரங்களை ரகசியமாக வைத்திருக்கிறார் இராமச்சந்திரன் அது இங்கே பெருமளவு சந்தேகங்களை உருவாக்கியுள்ளது

நீங்கள் எந்நேரம் சென்னையை விட்டுப் புறப்படுகிறீர்கள் என்று நேற்று ஒரு செய்தியாளர் கேட்டார். உடனே இராமச்சந்திரன் கோபமாக "நீர் அதை ஏன் அறிந்து கொள்ள விரும்புகிறீர்? இது ஒன்றும் பத்திரிகைக்காரர்கள் வேலையில்லை" என்று கூறினார்.

தன்னோடு பயணம் வருபவர்கள் யார் என்பதைச் சொல்லுவதிலும் இராமச்சந்திரன் பிடிவாதம் காட்டினார்.

அவரது தனிச் செயலரும் நிதித்துறைச் செயலரும்தான் அவரோடு அதிகார பூர்வமாகச் சென்றபோதிலும் அவரது குழுவுடன் அதிகார பூர்வமற்ற வேறு மூவரும் கூடச் செல்கின்றனர். அவரது மருத்துவர் சுப்பிரமணியம், இதயம் பேசுகிறது ஆசிரியர் மணியன். திரைப்படத் துறையைச் சார்ந்த சித்ரா கிருஷ்ணசாமி ஆகியோரே அன்னார்

தி. மு. க. பிளவு பட்ட காலத்திலிருந்து மணியன் இராமச்சந்திரனுக்கு நெருக்கமாய் இருந்து வருகிறார் என்பதும் இங்கே குறிப்பிடவேண்டியதாகும் அவர் திரை உலகோடும் நெருங்கிய தொடர்புள்ளவர்.

அதிகார பூர்வமற்றவர்களை அயல்நாட்டுப் பயணத்துக்கு ஒரு முதல்வர் தம்மோடு அழைத்துச் செல்வது வழக்கமில்லை என்று செய்தியாளர் ஒருவர் சுட்டிக் காட்டினார் அதற்கு இராமச்சந்திரன்'இரு அதிகாரிகள்தான் என்னோடு வருகின்றனர் மற்றவர்கள்தம் சொந்தப் பொறுப்பில் வருகின்றனர். யாரும் வெளிநாட்டுப் பயணம் போகலாம். அதை நான் எப்படித் தடுக்க முடியும்?" என்று கேட்டார்.

ஆனால் இங்கே அந்நியப் பயணத்திற்கு விசா தரும் அயலகத் தூதுவர் அலுவலகங்களை அணுகி விசாரித்தபோது. அந்த ஐவரும் முதல்வரோடு வருவதாகஅவற்றுக்குச் சொல்லப்பட்டுள்ளமை தெரியவந்தது;

ஆனால், இந்தக் கூட்டத்தில் உள்ள அரசு அதிகாரிகளல்லாதோரும் அரசாங்கச் செலவிலேயே அழைத்துச்செல்லப்படுகின்றனரா என்பது தெரியவில்லை.

முன்னர் தம் நாட்டுக்கு வருகை தருமாறு இங்கிலாந்து அரசும் மேற்கு ஜெர்மனி அரசும் இவருக்கு அழைப்பு விடுத்திருந்தன. பின்னர் அதை ரத்து செய்துவிட்டன. அப்போது இராமச்சந்திரனிடமிருந்து பதில் வராததே இதற்குக் காரணம்.

இப்போது இவர் பயணம் புறப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகத்தான், இங்குள்ள இந்நாட்டுத் தூதுவராலுவலகங்களுக்கு அமெரிக்கா செல்லும் வழியில் இந்த நாடுகளைக் காண இராமச்சந்திரன் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"நாங்கள் கடந்த ஜூனில் அழைப்பு அனுப்பியது உண்மைதான்! ஆனால், அழைப்புக்கிடைத்தது என்று பதில் எழுதக்கூட இராமச்சந்திரன் அக்கறை காட்டாததால் நாங்கள் அந்த அழைப்பைத் திருப்பத் பெற்றுக் கொண்டோம்!" என அந்த இரு நாட்டு அரசும் தமிழ் நாட்டு அரசுக்குத் தெரிவித்து விட்டன.

(டெல்லியிலிருந்து வெளிவரும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழின் சென்னை நிருபர் எழுதிய கட்டுரை)

இந்தியை யார் மீதும் திணிக்க முடியாது!

மொரார்ஜி அன்று கூறியது!

இந்தியாவின் தேசிய மொழியை மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்க முடியாது. எதேச்சாதிகார நாடாக இருந்தால் அப்படி செய்யமுடியும். ஆனால் நம் முடையதைப் போன்ற ஒரு ஜனநாயக நாட்டில் அது இயலாத காரியம். எந்த ஒரு மொழியையும் நாடு முழுவதிலும் திணித்துவிடுவது என்பது இயலக் கூடியதல்ல.

தேசிய மொழிப் பிரச்சினை சிக்கலுடையதாகிவிட்டது என்றாலும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தத் தீர்வு நாடு முழுவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாயிருக்க வேண்டும்.

ஒரு தேசிய மொழி இல்லாவிடில் நாட்டின் ஒற்றுமை முழுமை பெறாது என்பது எனது கருத்தாகும். ஆனால் இந்த ஒரே தேசிய மொழியை ஓர் உத்தரவினால் கொண்டுவந்து விடமுடியாது. ஏனெனில் அந்த உத்தரவு மக்களின் மரியாதையைப் பெற்றாலன்றி, செல்லுபடியாகாது.

[1960-ஆம் ஆண்டு, மொரார்ஜி தேசாய் மத்திய நிதியமைச்சராக இருந்தபோது ஆமதாபாத்தில் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசியபோது கூறியது.]

தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞரின்
கரங்களை வலிவுபடுத்தும் கொள்கைக்
கேடயமாக—தி. மு கழக
இலட்சிய முழக்கமாக
டிசப்பர் 6 முதல் வெளிவருகிறது!

திராவிடன்

(தி. மு க. வார ஏடு)
நிறுவனர்: என். வி. என்.
விலை 0—40 காசு
நிர்வாகி, திராவிடன்,
4 காரணீஸ்வரர் கோயில் தெரு,
மயிலை — சென்னை — 600004
(முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்(

திடுக்கிடும் கதை

கருணாநிதி

நியூயார்க் நகரத்தைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம், சிலர் நேரே பார்த்திராவிட்டாலும்! அமெரிக்காவின் அழகுத் திருநகர் மட்டுமல்ல; அகிலத்தின் எழில்மாடம் என்றெல்லாம் வர்ணிப்பர் நாடு சுற்றிகள். வானத்தைத் தொடும் மாடமாளிகைகள் அங்கே உண்டு! உச்சியிலே எரிவது மின்சார விளக்கா, அல்லது நட்சத்திர மண்டலம் வரையிலே அந்த உப்பரிகை உயர்ந்து நிற்கிறதா என்ற ஐயப்பாடுகள் புதிதாகப் பார்க்கிறவர்களுக்கு ஏற்படுவது சகஜம். அத்துணை உயரம் பொருந்திய பல அடுக்கு மாடிகள் உள்ள ஹோட்டல் ஒன்றில் உச்சிப்பகுதியில், மூன்று நண்பர்கள் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்கே தங்கியிருந்தார்கள். அவர்கள் நகர் சுற்றிப்பார்க்க வந்தவர்கள். உயர்ந்த கட்டிடங்களுக்கு மேலே ஏறிச் செல்வதற்கான, "லிப்ட்" வழியாகக் கீழே வந்தால், அந்த மூவரும் நகரத்தின் சிங்காரப் பகுதிகளையெல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு, இரவு பத்து மணிக்கு மீண்டும் தங்களின் அறைக்குத்திரும்புவது வழக்கம். இப்படிச் சிலநாட்கள் மூவரும் நியூயார்க்கின் நேர்த்தியை ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் வேடிக்கை விநோதங்கள் விசித்திரக் கேளிக்கைகள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டுத் தங்கள் ஹோட்டலுக்குத் திரும்பினார்கள். கீழ்த்தளத்திலுள்ள ஹோட்டல் மானேஜர் அவர்களைப் பார்த்து வருத்தத்துடன் ஒரு செய்தியைச் சொன்னார். அதாவது:

"அன்புள்ள நண்பர்களே! இன்று நீங்கள் உங்கள் அறைக்கு நடந்துதான்போக வேண்டும். ஏனெனில் நமது "லிப்ட்" கெட்டுவிட்டது. அதற்காக வருந்துகிறேன்" என்பதுதான் அந்தச் செய்தி, உண்மையிலே அது வருத்தமான செய்திதான். லிட்டில் ஏறி உட்கார்ந்தால் சில நிமிடங்களில் எந்தத் தொல்லையுமின்றிக் குறிப்பிட்ட இடத்திற்கு அவர்கள் போய்விட முடியும். லிப்ட்கெட்டுவிட்ட காரணத்தால் — இப்போது அவர்கள் கடக்கவேண்டிய மாடிகள் பல! ஏறவேண்டிய படிகள் இரண்டாயிரத்துக்கு மேல்இருக்கும். ஊரெல்லாம் சுற்றிக் காலெல்லாம் அலுத்துப் போயிருக்கிற அவர்கள் அவ்வளவு படிகளில் ஏறி, மாடிகளைச் சுற்றிச் சுற்றித் தங்களுடைய அறைக்குப் போவதென்றால் சாமான்யமா? என்ன செய்வது— போய்த்தானே தீரவேண்டும் மூவரும் படிகளில் ஏறிப் போகத் தீர்மானித்தார்கள்.

அத்தோடு அலுப்புத்தெரியாமல் இருக்க, ஒரு புதிய உற்சாகமான ஏற்பாடு செய்துகொண்டார்கள். தங்கள் அறையை அடைவதற்குள், வழியில் மூவரும் ஆளுக்கு ஒரு கதை சொல்வதென்று முடிவு கட்டினார்கள். அதன்படி முதல் கதை ஒரு காதல் கதை! அந்தக் கதையை ரோமியோ என்பவன் சொல்லவேண்டும். அடுத்த கதை வீரக் கதை; அதை ஆண்டனி என்பவன் சொல்ல வேண்டும். மூன்றுவது திடுக்கிடும்கதை! அதைச் சார்லஸ் என்பவன் சொல்ல வேண்டும். அதன்படியே முதலில் ரோமியோ காதல்கதை கூற ஆரம்பித்தான்.

காதல் கதை

பாபிலோன் நகரம் செல்வத் திருநகரம். அங்குதான் நான் சொல்லப்போகும் கதையின் பாத்திரங்கள் வாழ்ந்தார்கள். ஓவிட் என்பான் இதை அழகாக எழுதியிருக்கிறான்.

இரட்டைக்குழந்தைகளைப்போல இரண்டு வீடுகள் ஒட்டிக் கொண்டிருந்தன. ஒற்றைக்கல் சுவர் ஒன்று அந்த வீட்டைப் பிரித்து வைத்தது. அதில்தான் இரண்டு நெஞ்சு இணைந்த காதலர்கள் வாழ்ந்தார்கள். திஸ்பே ஒரு அலங்காரத் திருஉருவம்; பைரமஸ் ஒரு ஆணழகன். கருத்தொருமித்த அவர்களுடைய காதலை மூடிமுறைக்க அவர்களுடைய பெற்றோர்கள் முடிவு செய்தனர். வெம்பிய உள்ளத்தினராய் இல்லத்துக்குள்ளேயே வாடி வதங்கினார்கள். அதற்கு அந்தக் களிமண் சுவரோ உணர்ச்சிக்கு இடப்பட்ட வேலியாக இருந்து வேலை பார்த்து வந்தது

யானையின் கண்களைவிடக் காதலர்களின் கண்களுக்குத் தான் கூர்மைஅதிகமாயிற்றே! அந்தச் சுவரிலே இருந்த ஒரு பொந்து அவர்களுடைய கவனத்தை ஈர்த்தது. அவ்வளவு தான்!

நேரம் — காலம் இன்னதென்று பாராது திஸ்பேயும், பைரமசும் 'குசுகுசு'வென்று காதலுரையாட ஆரம்பித்தார்கள். சுவரின் ஒரு பக்கத்திலே பைரமஸ். வார்த்தைகளைக் கொட்டி அவளை வர்ணித்தபடி நிற்பான். அதையெல்லாம் ஆமோதித்தபடி சுவரின் மற்றொருபக்கத்திலே திஸ்பே மெய்மறந்து நிற்பாள். அந்திநேரமென்றும், அர்த்தசாமமென்றும்பாராது அவர்கள் இன்பக்கடலாடினார்கள்! இத்தனை நாட்கள் இரண்டு ஜோடிக் கிள்ளைகளை பிரித்து வைத்திருக்கும் தடைக்கல்லாக நின்ற அந்தக் களிமண்சுவர், இப்போது தேக்கிய இன்ப வெள்ளத்திற்குப் பெருங்கரையாக நின்று பேருதவி செய்தது. பொந்தின் இடையிலே காந்தச் சொற்களின் இன்னிசை எந்நேரமும் ஒலித்தபடி இருந்தது. அவர்களுடைய உதடுகள் உராய்ந்ததில்லை. ஆனால் எப்போதும் 'இச்' என்ற ஒலி மட்டும் மெல்லெனஅதிர்ந்து கொண்டே இருந்தது.

பெற்றோரை ஏமாற்றும் காதலராய் அவர்கள்எத்தனை நாட்கள்தான் வாழமுடியும்? வேற்றூர் சென்று திருமணம் செய்து இல்வாழ்வு நடத்த அந்த இளம் இதயங்கள் முடிவு செய்தன.

பாபிலோன் நகருக்குப் பக்கத்திலே நிநசின் சமாதி ஒன்றுஇருக்கிறது. அதன் அருகிலே நிற்கும் மல்பெரி மரத்தின் பக்கத்திலே இரவு நேரத்தில் இருவரும் சந்திப்பது எனவும்—பின்னர் அங்கிருந்து கட்டுப்பாடென்னும் கோடரியால் வாலிபத்தை வெட்டிச் சாய்க்கும் பெற்றோரை விட்டுவிட்டு ஓடி விடுவது எனவும்—முடிவு செய்தனர்!

பெண்கள்தான் எப்போதும் அவசரக்காரர்களாயிற்றே! அதன்படிக் குறிப்பிட்ட நேரத்தில், கள்ளரும் அஞ்சி நடுங்கும் நள்ளிரவைக் கண்டு உள்ளம் நலியாமல் திஸபே மல்பெரிமரத்தடிக்கு வந்து சேர்ந்தாள். ஆனால் பைரமசைமட்டும் அங்கே காணவில்லை. அந்த இருட்டிலே பேதைப் பெண் அவள் அவனை எங்கே தேடுவாள்? காற்றிலே புழுதி பறக்கும் ஓசைகூடப் பைரமசின் பாத ஒலியாகத்தான்தோன்றியது அந்தப் பாவைக்கு! "ஓ" வென்ற ஒலி அலை கேட்டுத் திஸ்பே திரும்பினாள்.

புள்ளிமானைக் கொன்று போட்ட பெண் சிங்கம்ஒன்று இரத்தம் வழியும் நாக்கைச் சப்புக்கொட்டியவாறு வந்து கொண்டிருந்தது. பாவம்! திஸ்பே நடுநடுங்கிவிட்டாள். பாயவரும் சிங்கத்தின் பார்வையை மறைத்து உயிரைக் பாதுகாத்துக் கொள்வதற்காக அந்தப் பாவை, தன் மார்பகத்தை மூடியிருந்த மேலங்கியைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரே நொடியில் ஓடிவிட்டாள்! காற்றிதேமிதந்து வந்து தன்முகத்தைமறைத்த மேலங்கியைத் தன் கூரிய நகங்களால் பிருண்டி, இரத்தக்கறை படிந்த பற்களால் கிழித்து எறிந்து விட்டுத் தன் குகைக்கு நடைபோட்டது அந்தக் கிழட்டுச் சிங்கம்!

காதலியை காக்கவைத்த பைரமஸ். சிங்கம் அப்பால் நகர்ந்த பின்புதான் அங்கு வந்து சேர்ந்தான். காதலியைத் தேடினான்! தேடினான்! ஆனால், அவனோ திஸ்பேயின் இரத்தம் தோய்ந்த மேலங்கியையும், சிங்கத்தின் பாதச் சுவடுகளையும்தான் பார்க்க முடிந்தது,

உள்ளம் வெடிக்க, உடல் துடிக்க அவன் சோகப் பெருங் கூச்சலிட்டான். "தாமதித்து வந்ததால் என் தாரத்தை இழந்தேனே சிங்கத்தால் நீ சாகவில்லை, கண்மணியே! என்னால்தான் நீ இறந்தாய்! நள்ளிரவில் — நடுக்காட்டில் —இளையவளாம் உன்னைத் தனியாகவரச்சொல்லிநானே தான் உன்னைக்கொன்றேன்" என்றெல்லாம் புலம்பித் தன் உடைவாளை மார்பிலேபாய்ச்சிக் கொண்டு, திஸ்பேயின் மேலங்கியை அணைத்தபடி மண்ணிலே சாய்ந்தான், அந்த வனப்புகொள் வாலிபன்!

இந்நேரம் காதலன் வந்திருப்பான்; கண்காணச் சீமை சென்று காதல் வாழ்வு நடந்தலாம் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டியபடி திஸ்பே மல்பெரிமரத்தடிக்கு வந்தாள். அய்யகோ! அவள் கண்ட காட்சியை அவளால் நம்பவே முடியவில்லை இதயராஜாவின் இதயத்தைக் கூர்வாள் கௌவிக்கொண்டிருந்தது. திஸ்பே உடன் தாவிக் காதலனின் மெய் தழுவி "அன்பே உன்னுயிர் குடித்தது கொடுவாள் அல்ல; நான்தான் உன்னைக் கொன்றேன்; என் மீது உனக்குள்ளவற்றாத காதல்தான் உன்னைக்கொன்றது!"—என்று அழுது, பைரமசின் நெஞ்சிலே பதிந்திருந்த வாளை எடுத்துத்தன் மார்பிலேபாய்ச்சிக் கொண்டாள். உற்றாரின் கட்டுப்பாட்டிற்கும் ஊராரின் கண்டனத்திற்கும் ஆளாகி உள்ளம்நொந்து புதுவாழ்வு நடத்தச் சென்ற காதலர்கள் நிநசின்சமாதிக்கு அருகிலே பிணமாகச்சாய்ந்து கிடந்தார்கள். சமுதாயம் சேர்த்துவைக்காத ஜோடிகளை மரணம் தன் இருட்கரங்களால் இணைத்து வைத்தது. ஆனால் ஒன்று! மல்பெரி மரத்தடிக்குத் தாமதமாக வந்து திஸ்பேயை வாட்டிய பைரமஸ், சாக்காடென்னும் பூக்காட்டிற்கு முன்னமேயே சென்று தன் ஆருயிரைத் தேடிக்கொண்டிருந்தான்.

இந்தக் கதையைக் கூறிய ரோமியோவும் மற்ற இருவரும் கதையிலேயே லயித்து, ஆயிரத்துக்கு மேற்பட்ட படிகளைக் கடந்தனர். ஏற வேண்டிய தூரம் இன்னும் சிறிதுஇருக்கிறது. தீர்மானப்படி ஆண்டனிவீரக்கதையை சொல்லத் தொடங்கினான்.

வீரக்கதை

"ரோமியோ காதல் கதை என்ற பெயரால் உண்மையிலே ஒரு காதல் கதை சொன்னான். நான் வீரக்கதை என்ற தலைப்பில் ஒரு விசித்திரக் கதை சொல்லப்போகிறேன்; மிகச் சுருக்கமாக; கேளுங்கள் இருவரும்!

• அடிமை வியாபாரத்தை எதிர்த்துப் பெரியதொரு கிளர்ச்சி ஏற்பட்டதல்லவா? அதுபோல ஒரு கிளர்ச்சி, வேறு ஒரு உரிமையைக் காப்பாற்றுவதற்காக நடைபெற்றது. அந்தக் கிளர்ச்சி எந்த ஊரில் நடந்தது என்றெல்லாம் கேட்காதீர்கள். கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவர் பெயரும்தெரியாது கிளர்ச்சியின் நோக்கம் என்னவென்றால் அந்த ஊரில் உள்ள ஒரு ஜாதிக் கூட்டத்தாரைஊரை விட்டே விரட்டவேண்டும் என்பதுதான்! அந்த ஜாதிக் கூட்டத்தாரின் தலைவர் தான் அந்த ஊரையே பரிபாலித்து வந்தான். தலைவனின் ஜாதியை விரட்டவேண்டுமென்று கிளர்ச்சித் தலைவர் ஆக்ரோஷமாகப் பேசிவந்தார் அப்படி அந்தஜாதியார் ஓடாவிட்டால் அவர்களைக் கண்ட இடத்தில் கொன்று போட வேண்டுமென்று கர்ச்சனை செய்தார். அந்த ஜாதித் தலைவன் மிகவும் தந்திரசாலி. அவன் தன்னுடைய சூழ்ச்சியைப் பயன்படுத்திக், கிளர்ச்சிக்காரர்களின் ஜாதியிலே பிறந்த ஒருவரைப் பிடித்து அந்தஊருக்குத்தலைவனாக்கி விட்டான். அந்தப் புதுத்தலைவன் கிளர்ச்சிக்காரத் தலைவரைக் கூப்பிட்டு, "நீர் இனிமேல் இந்த ஊரைவிட்டு யாரையும்துரத்துவதாகவோ அல்லது அவர்களை பயமுறுத்தும் வகையிலோ பேசக் கூடாது. அப்படிப் பேசினால் உம் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறிவிட்டான். புதுத்தலைவனின் மிரட்டலைக் கண்டகிளர்ச்சித் தலைவர், உடனே, "புதுத்தலைவருக்கு ஜே" என்று கூறிவிட்டு, ஜாதித் தலைவனையும், அவன் கூட்டத்தாரையும் ஊரைவிட்டுத் துரத்துவதை பற்றி இனிமேல் பேசுவதில்லை என்று வாக்குஅளித்துவிட்டு கிளர்ச்சிப் படையில் உள்ள வீரர்களின் கவனத்தையும் வேறுபக்கம் இழுக்க ஆரம்பித்துவிட்டார். இது தனட்பா என்னுடைய வீர கதை!" என்று முடித்துவிட்டான் ஆண்டனி.



அவர்கள் மூவரும் இரண்டாயிரம் படிகளையும் அநேகமாகக் கடந்துதங்கள்அறைக்குப் பக்கத்திலே வந்துவிட்டார்கள். மூன்றுவதாக சார்லஸ சொல்லவேண்டிய திடுக்கிடும் கதை பாக்கியிருந்தது ஆண்டனி, அவனைப்பார்த்து "சார்லஸ், உன் கதையைச் சொல்லு" என்றான். சார்லஸ் சொல்ல ஆரம்பித்தான்: "தோழர்களே! நான்உண்மையிலேயே இப்போது திடுக்கிடும் கதைதான் சொல்லப் போகிறேன். இரண்டாயிரம் படிகள் ஏறிய நாம் மறுபடியும் இரண்டாயிரம் படிகள் கீழேஇறங்கி, மீண்டும் இரண்டாயிரம் படிகள் மேலே ஏற வேண்டும்' என்றான்.

'ஏன் - உன் 'திடுக்கிடும் கதை' அவ்வளவு நீளமானதா?" என்றான் ரோமியோ.

"இல்லை ரோமியோ, நமது அறையின் சாவியைக் கீழ்த்தளத்தில் மானேஜர் அறையிலேயே வைத்துவிட்டுவந்துவிட்டேன்" என்று வருத்தமுடன் சொன்னான் சார்லஸ்.

இருவருக்கும் அது திடுக்கிடும் கதையாகத்தானே இருந்திருக்கும்!

[குறிப்பு: ஒரு சிறிய நகைச்சுவைத் துணுக்கை ஆதாரமாகக் கொண்டு இந்தக் கற்பனை தீட்டப்பட்டது.]

★



காட்டிக் கொடுக்கும் ஜூடாஸ் ஆகாதீர்!

1938-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது 7—2—38 அன்று காஞ்சிபுரத்தில் ஓர் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு ஆந்திர அறிஞர் பிறகு ஆந்திர பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தவருமான சர். கே. வி. ரெட்டி தலைமையேற்று ஆற்றிய உரை இன்றைக்கும் பொருத்தமாக உள்ளது.

அந்த உரையின் ஒரு பகுதி வருமாறு:

தேச பக்தி வளரவோ, தேசிய ஒற்றுமை வலுப்படவோ, மக்கள் ஒன்றுகூடவோ ஒரு பொது மொழி அவசியந்தானா? சரித்திரம் மாறுபட்ட உண்மையைச் சாற்றுகிறது.

கனடாவைப்பார்ப்போம். அங்கு பெடரல் அரசியல் இருக்கிறது. அங்கு இப்போதும் பிரஞ்சு, இங்கிலீஷ் ஆகிய இரு மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன; 1791ஆம்ஆண்டு சட்டம் ஏற்பட்டதிலிருந்து.

கியூபெக் சட்டசபையில் பிரஞ்சு, இங்கிலீஷ் ஆகிய இரு மொழிகளும் உபயோகிக்கப்படுகின்றன. இரு மொழிகளும் உபயோகிக்கப்பட வேண்டும் என்பது அரசியல் அமைப்பில் திருத்தங்கள் ஏற்பட்ட நாள் தொட்டு நடைமுறையிலே காட்டப்பட்டே வருகிறது.

தென் ஆப்பிரிக்காவை எடுத்துக் கொண்டால் அங்கு இரு இனத்தவர் இருக்கின்றனர். இரு மொழிகள் இருக்கின்றன. ஆங்கிலேயருக்கு இங்கிலீஷ், போயர்எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சு மொழி இன்றும் இருந்து வருகிறது.

சுவிட்ஜர்லாந்து நாட்டிலே மூன்று வித ஜாதியினர் உள்ளனர். மூன்று வித மொழிகள் பேசப்படுகின்றன. ஆனல் தேசம் ஒன்றுதான். தேசிய ஒற்றுமையும் உள்ளது,

1874 ஆம் ஆண்டு நிறைவேறிய சமஷ்டிச்சட்டப்படி ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலி ஆகிய மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்படுத்தப்பட்டன.

இவைகளையெல்லாம் கவனிக்கும்போது இந்தியாவுக்கு ஒரு பொது மொழி அவசியமில்லை என்பது நன்கு விளங்கும்.

பல நூற்றுக்கணக்கான மொழிகள் பரவியுள்ள மாகாணங்களிலும். சுதேச சமஸ்தானங்களிலும் ஒரு புதுப் பொது மொழியைப் பரப்பி நிர்ப்பந்தபடுத்துவது என்பது சாத்தியமான காரியமாகாது. இந்தியை கட்டாயப் பாடமாகப் புகுத்தினல் இந்த மாகாணத்திற்கு மற்றைய மாகாணங்களுடன் சம்பந்தப்படுவதால் உண்டாகும் நிலைமையை இனிக் கவனிப்போம்.

மத்திய அரசு கல்கத்தாவில் இருந்தபோது மத்திய அரசு உத்தியோக மண்டலம் பூராவும் வங்காளிகளிடம் இருந்தது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சர்க்கார் தலைமை ஸ்தானத்தை டில்லிக்கு மாற்றிய பிறகு டத்தியோக மண்டலம் பஞ்சாபிகள் ஐக்கியமாகாணவாசிகள் வசமாயிற்று.

ஆனல் மதராசுக்கு என்றும் போக்கிடமில்லாதிருந்தது. சென்னைமாகாணத்தைக் கண்டாலே வடநாட்டாருக்கு அலட்சியம்.

சென்னைக்குப் பல அநீதிகளையும் இழைத்திருக்கிறார்கள் உதாரணமாக மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்ட காலத்தின் போது, ஆண்டு தோறும் 350 இலட்ச ரூபாய் மெஸ்டன் தீர்ப்பு என்ற திட்டத்திற்கிணங்க சென்னை மாகாணம் மத்திய சர்க்காருக்குக் கொட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

மனிதனுடைய சுருத்துக்களை மொழி எவ்வளவு தூரம் உருவாக்குகிறது என்பதை இன்றைய (காங்கிரஸ்) சர்க்கார் உணர வேண்டும்,

மக்களுடைய மொழியை ஒட்டியே மனவளர்ச்சி இருக்கிறது. குழந்தைகளின் கருத்து வளர்வதும். பிறகு வாழ்க்கையிலே இலட்சியங்கள் ஏற்படுவதும் மொழி, கலை. அறிவுகளினலேயாகும்.

தமிழ் எங்கே? இந்தி எங்கே? இரண்டிற்குமா ஒப்பிட்டுப் பார்ப்பது! தொல்காப்பியம் என்பது ஓர் இலக்கண நூல். ஒரு மொழி நல்ல வளர்ச்சி அடைந்த பிறகுதான் அதற்கு இலக்கண நூல்தேவை இருக்கும்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னலேயே தமிழ்மொழி ஓர் உன்னத வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது விளங்கும் தமிழ் மொழி. பண்டைக்கால மொழி என்பதோடு, கவர்ச்சி வனப்புநிரம்பியமொழி அதன் அடிகளை நெருங்க இந்தியினல் முடியவும் முடியாது "கவிதையெற்றும் வகைக்கு ஏற்றபடி மொழியை வளர்த்ததில், சமஸ்கிருதத்தைவிடத் தமிழே நிகரற்றது'' என டாக்டர் பர்னல் கூறுகிறார்.

டெல்லியிலே நமக்கு (சென்னை மாகாணத்தவருக்கு) செல்வாக்கே கிடையாது. நமது உணர்ச்சிகளை மதிப்பதில்லை. முன்பு வங்காளம், இப்போது பஞ்சாப் ஐக்கிய மாகாணம் ஆகியவை நம்மை அடிமைகளெனவே கருதி வருகின்றன.

நாம் நமது சம உரிமைக்காக எழ வேண்டும். பிற மாகாணங்களுக்கு இருப்பதைப் போலவே இந்திய சர்க்கார் நிர்வாகத்திலே நமக்கு உரிமையும் பங்கும் இருக்க வேண்டும்,

இந்தி மொழிக்கு விட்டுக் கொடுத்தால் அது வடநாட்டு மாகாணங்களுக்கு அடங்கி நடக்கும் சாதுக்கள் நாம் என்பதற்கு மற்றொரு உதாரணம் என்றுதான் கருத முடியும்.

இந்தியர்களில் பெரும்பான்மையினர் இந்திமொழி பேசுகிறார்கள் என்று கூறுவது ஆதாரமற்றது; சுத்த அபத்தம்.

வங்காளிகள் இந்திமொழியைச் சட்டை செய்வதில்லை. முஸலீம்கள் கட்டாய இந்தித் திட்டத்தை எதிர்க்கிறார்கள். அவர்கள் என்றும் விரும்புவது உருது மொழியே.

இந்தி திணிக்கப்படுதலை பம்பாய் மாகாணத்திலுள்ள கன்னட மொழி பேசுபவர்களும் மராட்டிரும் கடுமையாக எதிர்க்கிறார்கள்

சிந்து, அசாம் பஞ்சாப் ஆகியவைகளும் இத்தகை முறையை எதிர்த்தே தீரும்.

தன்னைப் பெற்ற தாய், தாய் நாடு, தாய் மொழி ஆக ஒருவனுக்கு மூன்று தாய்மார் என்று நமது முதுமொழி கூறுவதுண்டு. தாயைக்கவனியாதவன் மாதாவிற்குத் துரோகம் செய்தவனுகிறான். தாய் மொழியைப் பாராட்டாதவன் தாய் மொழியைக் காட்டிக் கொடுத்த துரோகியாவான்.

ஏசுநாதரைக் கொஞ்சப் பணத்திற்காகக் காட்டிக் கொடுத்த ஜூடாஸ் என்று தாய் மொழியைக் கட்டிக் கொடுப்பவனை நாம் கூறுவோமாக! ஜூடாஸ் செய்த சதிகாரணமாக ஏசுநாதர் கொல்லப்பட்டார், ஆனல் கிருஸது மார்க்கம் நிலைத்து நிற்கிறது. அதுபோன்றேதிராவிடமொழிகளும் நிலைத்து நிற்குமாக,

★

கேரளத்து அரசியல் மேதையின் இந்தி எதிர்ப்பு முழக்கம்!

தென்னட்டிலுள்ள படித்து வேலையில்லாத இளைஞர்கள் வடநாடு சென்று வேலை பெற இந்தி உதவும் எனக் கூறப்படுகிறது. பள்ளிகளில் இளம் வயதில் நிர்ப்பந்தமாகப் புகுத்தப்பட்ட இந்தி மொழியைப் படித்த தென்னட்டுப் பிள்ளைகள் வேலையைத் தேடிக் கொண்டு வடநாடு செல்லும் பருவம் வந்ததும் அந்த மொழியையே மறந்துவிட்டிருப்பார்கள்

இந்தியை அவர்கள் மறந்து விடவில்லை என்று வைத்துக் கொண்டாலும் வடநாட்டிலே இந்தப் படித்த பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும் என்ற நிச்சயமும் இல்லை. இந்தி தெரிந்திருந்தால் தென்னட்டு பி ஏ. பட்டதாரிகளுக்கு வட நாட்டில் வேலை கிடைக்கும் என்ற கூற்று சுத்த அபத்தம் என்பது 1937 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி இலண்டன் கிழக்கிந்திய சங்கத்திலே லார்டு லோதியன் தலைமையில் சர் தேஜ் பகதூர் சாப்ரு அவர்கள் படித்த 'இந்தியாவிலே கல்வியும் வேலையில்லாத் திண்டாட்டமும்' என்ற பிரசங்கத்தைப் பார்ப்போர் நன்கு உணர்வர். காங்கிரஸ் பல இடங்களில் கூடினதற்கும் சமுதாய தொழிலாராய்ச்சி சம்பந்தமான பல மாநாடுகள் பல சமயங்களில் இந்தியாவில் பல முக்கிய இடங்களிலே நடைபெற்றதற்கும் ஆங்கிலமேதான் காரணம். காங்கிரஸ அரசாட்சி செலுத்தும் பல மாகாணங்களிலும் சட்டசபைகளின் நடவடிக்கைகள் தாய் மொழியில் நடைபெறவில்லை ஆங்கிலத்தில்தான் நடைபெறுகிறது

பல்வேறு காரணங்களால் ஆங்கில மொழி நம்நாட்டிலே மதிக்கப்படும் விருந்தாளியாக வந்து விட்டது. அது நிரந்தரமாக நிலைத்து நிற்கும் தகைமைத்தது. வளர்ச்சி, கவர்ச்சி நிரம்பிய மொழி, எவ்வளவு நுட்பமான புலப்படுத்துவதற்கான எண்ணங்களாயினும் அந்த மொழியிலே அழகுபெற விளக்க முடியும். விஞ்ஞானம் போன்ற விலை மதிக்கவொண்ணு விதவிதமான பல மணிகள் ஜொலிக்கும் மொழி

ஆங்கிலத்தால் தேசபக்தி போய் விட்டதாகக் கூறுகிறார்கள். தேசபக்தி என்ற தத்துவத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளாமல் ஆங்கிலம் அந்நிய மொழி; அதை உதறித் தள்ளுவோம் எனக் கூறிப் பொது மக்கள் விருப்பத்திற்கு மாருக தேசத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் நிலவி வரும் இந்தியை அகில இந்தியப் பொது மொழியாக்க வேண்டும் எனக் கூறுவதற்குக் காரணம் ஒன்றுமில்லை

அக்காரியமும் பலிக்காது; கிரிக்கெட் விளையாட்டை தேசீயவிளையாட்டாககொள்ளலாமா என்ற விஷயத்திலே சென்னமந்திரிகளுக்குள் அபிப்பிராயபேதமிருந்தது. கிரிக்கெட் அந்நிய தேசத்தாரின் விளையாட்டு; ஆகவே அதை நாம் வெறுத்து விலக்க வேண்

(10-ம் பக்கம்பார்க்க)

நாடாளுமன்றம் எடுக்கப்போகும்....

(12-ப்பக்கத் தொடர்ச்சி)

கும் உலகுக்கும் தானே ஒழிய அவருடைய வீட்டாருக்கு அல்லவே!

இந்திரா சோவியத் சென்ற போது அறுபது இலட்சம் ரூபாய்க்கு சஞ்சய் தயாரிப்புகளை வாங்கும் ஒப்பந்தத்தை உறுதி செய்தார்.

ஏஜெண்டுகள் சிறிய வாகனம் கிடைக்கும் என எதிர்பார்த்துக் காத்திருந்து இறுதியில் பொறுமையிழந்து முன் பணத்தை திருப்பித் தருமாறு கேட்டனர். பணத்திற்கான வட்டியைத் தருவதாக வாக்களித்தார் சஞ்சய்.

ஆனல் இது நாள்வரை முதலீட்டுப் பணத்தையோ — முன் தொகைகளையோ வட்டியையோ யாருக்கும் தரவில்லை.

1975 — ஆம் ஆண்டு நெருக்கடி நிலை தாண்டவமாடிய போது ஒரிசாவைச் சார்ந்த ஒரு தொழில் அதிபர் மிசாவின் கீழ் கைது செய்யப்பட்டார்.

அவர் செய்த குற்றம் தன்னுடைய முதலீட்டுப் பணத்தைத் திரும்ப தருமாறு சஞ்சயிடம் கேட்டதுதான், உண்மையில் அவருடைய கைது பிறருக்கு விடப்பட்ட எச்சரிக்கையே! பத்திரிகைகளில் லராத கைதுகள் இன்னும் எத்தனையோ! இந்திராவின் வீழ்ச்சிக்குப் பிறகு முதலீடு செய்த தொழில் அதிபர்கள் சஞ்சையை அன்ருடம் நீதி மன்றங்களில் சந்தித்துக் கொண்டிருக்கிருர்கள்.

இதுதான் மாருதிகாரின் மகாத்மியம். அதிகாரத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு சஞ்சய் ஆடிய ஆட்டம் ஒன்ரு? இரண்டா? பிரதமர் பதவி தாய் வகித்திருந்தாலும் மகன் தான் நாட்டின் உண்மையாள பிரதமராக உலாவந்துகொண்டிருந்தார்.

1975 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் நாடாளு மன்றத்தில் துணிவோடு கேள்வி எழுப்பினர் ஜோதிர் மயபாசு! மாருதி நிறுவனம் பற்றிய தகவல் மன்றத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதே அது,

மத்திய அரசு கடமையைச் செய்வதாக அறிவித்து அதிகாரிகளுக்குக்கட்டளையும் இட்டது. இட்ட பணிகளை ஒழுங்காகவும் கடமை தவராமலும் செய்கின்ற அதிகாரிகளும் நாட்டில் இருக்கத்தானே செய்கிருர்கள்! மாருதி நிறுவனம்பற்றிய தகவல்களை சேகரிக்க அதிகாரிகள் ஈடுபட்டார்கள். அதிகார துஷ்பிரயோகமும், ஊழலும் நிரம்பிய மாருதி நிறுவனம் பற்றி மக்கள் அறிந்துவிட்டால் பிரதமர் இந்திராவுக்கு இழுக்கு வந்துவிடுமே என்பதற்காக தலையீடு நடைபெற்றது. பிரதமர் மட்டும் அந்தப் பணியினைச் செய்யவில்லை. தனிச் செயலர் ஆர். கே. தவான், முன்னுள் சி. பி. ஐ. இயக்குநர் டி. சென்னும் அதிகாரிகளின் பணியில் தலையிட்டனர். இடையூறுகளை விளைவித்தனர். தொல்லை கொடுத்தனர். அந்த அதிகாரிகள் மீது பொய் வழக்கும் போட்டனர்.

நாடாளு மன்றத்தின் ஆணைப்படி நடைபெற்ற பணிக்கு இடையூறு விளைவித்த இந்திரா காந்தி, ஆர். கே. தவான், டி. சென் ஆகியோர் மன்றத்தின் உரிமைகளை மீறியுள்ளனர். மன்றத்தை அவமதித்துள்ளனர், என்று குற்றஞ்சாட்டப்பட்டது. மன்றத்தின் உரிமைக் குழுவுக்கு இப் பிரச்சினை பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது, சென்ற வருடம் நவம்பர் திங்கள் 18 — ஆம் நாள் மதுலிமயேயும் குப்தாவும் உரிமைப் பிரேரணையைக் கிளப்பினர். அதன் விளைவாகவே பரிசீலனை குழுவுக்கு விடப்பட்டது.

நாடாளுமன்ற உரிமைக் குழு தலைவர் சமர்குதா ஆவார். கலிமுதீன் அகமது, ஓ. வி. அழகேசன், இதேந்திர தேசாய், ராம்ஜேத்மலானி, கிருஷ்ணகாந்த், பி. ஜி. மாவ்லங்கர், ஆர். மோகனரங்கம், டாக்டர் வி ஏ. சயீத்முகமது, நரசிங், நரேந்திரா, பி. நாத்வாணி, மீதாலால் படேல், பி. சங்கரானந்த், மாதவ் பிரசாத் திரிபாடி, ரவீந்திரவர்மா ஆகியோர் உரிமைக் குழுவின் உறுப்பினர்கள்.

நாற்பத்து ஐந்து முறை கூடி விசாரணை நடத்தியது. முன்னுள் தொழில் அமைச்சர் டி. ஏ. பை. முன்னுள்வர்த்தக அமைச்சர்டி. பி.சட்டோபாத்யாயா உட்பட அநேக சாட்சிகள் நேரில் விசாரிக்கப்பட்டனர்,

1978 ஜுலைத் திங்கள் ஐந்தாம் நாள் இந்திரா காந்தி முதன் முறையாக உரிமைக் குழுவின் முன் நின்ருர். ஆனல் வாக்குமூலம் அளிக்க மறுத்துவிட்டார். கடிதத்தை மட்டும் படித்தார். உரிமைக்குழுவழங்கிய அறிக்கை 1007 பக்கங்கள் கொண்டதாக உள்ளது. இந்திரா காந்தி, ஆர். கே. தவான், டி. சென் ஆகிய மூவரும் தண்டனைக்கு உரியவர்கள் என்று குழுவின் பெரும்பாலானஉறுப்பினர்கள் கருதுகிருர்கள். நாடாளுமன்றம் கூடி இவ்வறிக்கையின் மீது தனக்குப் பொறுத்தமானதாகத் தோன்றும் தண்டனையை இம்மூவருக்கும் அளிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

உரிமைக்குழு இவ்வறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது இந்திரா காந்தி இல்லையாம், அறிக்கை குறித்து மன்றத்தில விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ உறுப்பினர் சௌகத் ராய் கோரியிருக்கிருர், தகுந்த பிரேரணைகொண்டு வருமாறு மன்றத்தலைவர் கே. எஸ், ஹெக்டே ஆலோசனை கூறியிருக்கிருர்,

உரிமைக்குழுவின் உறுப்பினர்கள் ஆழ்ந்த ஆய்வுக்குப் பின்னர் தங்களுடைய கருத்துக்களை சீரிய முறையில் அறிக்கையில் அளித்துள்ளனர்,

இவ்வறிக்கையின் மீது... நாடாளுமன்றம் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன?

★

பாராளுமன்ற எதிரில்...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

டம் நடத்தி மகஜரை அளிப்பது —

இந்த முடிவுகள் நாடெங்கிலும் உள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியா முழுவதிலும் உள்ள தொழிலாளர்களிடம் இந்தப் புதிய மசோதாவினை எதிர்த்துக் கையெழுத்துஇயக்கம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு முழுவதிலும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்துள்ள முன்னேற்றச் சங்கங்கள் பல்லாயிரககணக்கான பாட்டாளிகளின் கையெழுத்துக்களைப் பெற்றுப் பேரவைத் தலைமையில் சேர்த்தது. இதனைப் போன்றே ஏனைய எல்லா தொழிற்சங்கங்களும் கையெழுத்து இயக்கத்தினைத் தீவிரமாகச் செயல்படுத்தினர் எல்லா மாநிலங்களிலும் தொழிலாளர்களின் ஆட்சேபக் கையெழுத்து இயக்கம் சிறப்புற நடைபெற்றது.

டில்லியில் 19.10-78 காலை டாலக் டோரா ஸ்டேடியம் நோக்கி நாடெங்கிலுமிருந்து, பல்வேறு மாநிலங்களிலும் பெறப்பட்ட கையெழுத்துப் படிவங்களுடன் — தொழிற்சங்கத் தலைவர்கள் — பிரதிநிதிகள் பல்லாயிரக் கணக்கில் வரத் துவங்கினர். பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட சிறப்பு மாநாடு துவங்கியது.

வரலாற்றுச் சிறப்புமிக்க ரீதியில் இந்தியாவில் இயங்கி வருகிற அனைத்துத் தொழிற்சங்கங்களுமே ஒரணியாகத் திரண்டிருந்தது.

எதிரும் புதிருமாக இருந்து இயங்கி வருகிற தொழிற் சங்கங்கள் — எப்போதுமே ஒன்றுபட முடியாதென்கிறநிலையில் அமைப்பு ரீதியில் முரண்பட்டு இயங்கி வருகிற சங்கங்கள் — அனைத்துமே வேற்றுமைகளை மறந்து ஒரணி சேர்ந்து மாநாட்டில் ஒன்றுபட்டன

புதிய மசோதாவினைத் திரும்பப் பெறச் செய்தாக வேண்டியது தங்களது தலையாய கடமை என்பதனை உணர்ந்து ஒற்றுமைப்பட்டனர்.

சி. ஐ. டி. யு. — ஏ. ஐ. டி. யு. சி. — எச் எம். எஸ — எச். எம். பி. — யு. டி. யு. சி — ஐ என். டி. யு. சி. தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை — ரயில்வே — தபால்தந்தி — பேங்க் — எல். ஐ. சி உள்ளிட்ட நாற்பத்தைந்து சம்மேளனங்கள் ஒன்று திரண்டன.

தொழிலாளர் இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்புடைய நிகழ்ச்சியாக ‘19 ம் தேதிய சிறப்பு மாநாடு’’ உருவெடுத்தது!

புதிய தொழிலுறவு மசோதாவினைத் திரும்பப் பெற்ருக வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு மாநாட்டில் ஒருமனதான தீர்மானம் நிறைவேறியது. அரசாங்கம் இதனைத் திரும்பப் பெருத நிலை இருக்குமானல் தொடர்ந்து இயக்கத்தைத் தீவிரப்படுத்துகிற நடவடிக்கைக் குழுவின் பணிகளைப்பற்றியும் மாநாடு ஒருமனதாகத் தீர்மானித்தது!

மத்திய அரசின் புதிய தொழிலுறவு மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்க டெல்லியை நோக்கி ரயில்களிலும் கார்களிலும் — லாரிகளிலும் — சைக்கிள்களிலும் பல்லாயிரக் கணக்கில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் — பகுதியிலிருந்தும் திரண்டனர்.

கடும் குளிரையும் பொருட்படுத்தாது, 20 — 11 — 78 அதிகாலை முதலாகவே ஃபெராஸஷா கோட்லா திடலில் எல்லா மாநிலங்களிலும் இருந்தும் வந்த அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்கள் — ப்ரதிநிதிகள் தொழிலாளர்கள் வந்தவண்ணமாகவே இருந்தனர்.

காலை பத்து மணியளவில் மூன்று லட்சத்திற்கு மேற்பட்டோர் திரண்டிருந்த பாட்டாளிகள் பேரணி பாராளுமன்றம் நோக்கிப் புறப்பட்டது. ஒரு தலைப்பிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு படகுச் சங்கத் திடலை நோக்கிச் சென்றது மறுமுனையில் மீண்டும் மீண்டும் பல்லாயிரக் கணக்கில் பாட்டாளிகள் ஒலி முழக்கங்களுடன் — கொடிகளுடன் பேனர்களுடன் — வந்த வண்ணமாகவே இருந்தனர்.

இந்த ஊர்வலம் இந்தியாவின் எல்லாப் பகுதிகளையும் — அநேகமாக எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களையும்கொண்டதாக இருந்தது; வெளியூர்களிலிருந்து வந்த பல்லாயிரக் கணக்கான பாட்டாளிகள் தத்தமது பெட்டி — படுக்கைகளுடனேயே ஊர்வலத்தில் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள அனைத்துத் தொழிற் சங்கங்களில் தலைமை அமைப்புகளும் ஒன்று சேர்ந்து நடத்திய ஊர்வலம் வழக்கமாகக் காணுகிற ஊர்வலமாக இல்லை.

ஊரே வலம் வருவதாகக் காட்சியளித்தது. டெல்லிச் சாலைகள் பெரும்பாலானவற்றிலும் பாட்டாளிகள் பேரணியினர் பரவலாக வியாபித்திருந்தனர்.

ஊர்வலம் துவங்கி இரண்டு மணி நேரத்திற்குப் பின்னரும் — இரண்டு மைல் தூரம் சென்று விட்ட பின்னரும் — ஊர்வலம் புறப்பட்ட திடலில் பல்லாயிரக்கணக்கானேர் இருந்ததும் மேற்கொண்டும் பல பகுதிகளிலிருந்தும் ஒலி முழக்கங்களுடன் ஆங்காங்கு இருந்து வந்துகொண்டிருந்ததும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

பாட்டாளிகள்பேரணியில் அனைத்துத் தொழிற்சங்கங்களின் கொடிகளும் தோரணங்களும் ஒரு சேரப் பட்டொளி வீசிப்பறந்தது கண் நிறைந்த காட்சியாக இருந்தது.

இந்தியத்தொழிலாளர்கள் சங்க வேறுபாடின்றி இந்த அளவில் ஒற்றுமைப்பட்டு ஒரணியாகத் திரண்டதே இல்லை என அனைவருமேவியந்து பாராட்டத்தக்க வகையில் பாட்டாளிகள் பேரணி அமைந்திருந்தது.

இறுதியாகப்படகுச் சங்கத் திடலில் கூடியிருந்த கூட்டத்தினை மதிப்பிட்டதில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்டிருக்கும் என்று பலரும் தெரிவித்தனர்,

ஏறத்தாழ இருபத்தைந்து இலட்சம் பாட்டாளிகள் கையெழுத்து இயக்கத்தில் பங்குபெற்று கைபொப்பமிட்டுள்ள படிவங்கள் வந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டது,

“புதிய தொழிலுறவு மசோதா விவாதிற்குஎடுத்துக் கொள்ளப்படவேண்டாமென்றும் — திரும்பப் பெறச் செய்யவேண்டுமென்றும்’ அந்த மகஜரில் இந்தியத் தொழிலாளர்கள் வற்புறுத்தியுள்ளனர்,

இதனை விநயபூர்வமாக எடுத்துக்கொண்டு நாடாளுகிற அரசு விவேகமாகச்செயல்படுமென்றுஎதிர்பார்க்கிறேம். இல்லையெனில் தொழிலாளர் என்ன விலை கொடுத்தாவது — எந்தவகைத் தியாகத்திற்கும் தங்களைத் தயார் படுத்திக் கொள்கிற போராட்டங்களை மேற்கொண்டாவது — தொடர்ந்து அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டுத் தீவிர இயக்கத்தை நடத்துவது என்கிறதீர்மானத்தினை எடுத்துள்ளனர். தொழிலாளர்களது ஒன்றுபட்ட இந்த நியாயமான இயக்கத்திற்கு அனைவரும் ஆதரவு தாரீர்! அணி திரளுவீர்!!

நன்றியறிவிப்பு

கடந்த 12 — 11 — 78 அன்று சமீந்தரர்பட்டியில் மதுரை யாதவர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. தமிழ்க்குடிமகன் எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற எங்கள் திருமணத்தின்போது வருகை தந்தும் வாழ்த்துரை வழங்கியும் சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்த தமிழினத்தலைவர் டாக்டர் கலைஞர், பொதுச்செயலாளர், பேராசிரியர் யாதவர் கல்லூரி நிர்வாகத்தினர். அருமை நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைப் படைக்கிறேம்.

அன்புள்ள,

அலவாக்கோட்டை அலவை பெ. மாணிக்கம்
18 — 11 — 78 வசந்தா

தலைவர் கலைஞர் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி!

அனுப்பியோர் பட்டியல்

19–11–78 இதழ் தொடர்ச்சி ரூ 83641–25

சென்னை, யானைகவுனி வா. குப்புசாமி, பெரம்பூர் திருமதி, லட்சியவதி, சென்னை-2 திருமதி. காந்தா வேதாசலம், மா. இரா. கன்னிவேலன், கா. கோ. வேதாசலம், சென்னை-4 கமலசேகர், மாது. சிதம்பரம், பெரம்பூர் எஸ. பாலகிருஷ்ணன் நுங்கம்பாக்கம் இன்டர் நேஷனல் கம்பியூட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட். எழும்பூர் சொ, பொக்சிஷம் பெரம்பூர் கே. ரங்கநாதன், மே.அண்ணுநகர் வி. மணி, கல்மண்டபம் மு. இராமையா, இராயப்பேட்டை என். எஸ். அஜீஸ பிள்ளை, திருமதி. பத்மாவதி இராசாராம். தி. நகர்: இரா. புருடோத்தமன் பெரப்பூர் பி, டி. டீக்காராம். சென்னை-23 வி, கரிகாலன், பெ ஏழுமலை, ஏல். புவனேஸவரி, கே. இராமசாமி, நா. சிங்காரவேலு ச. இளம்பரிதி. சென்னை-29 ககணும்மாள், பாடி பெ.வா. மூர்த்தி ஏ, கே. எஸ். மணி, செங்குன்றம் ச. தமிழரசன். ச. தமிழ்ச் செல்வி, ச. லட்சுமி சண்முகம், ச. இளங்கோ, ச. அன்புச் செல்வன் பூந்தமல்லி எஷ. தண்டாயுதபாணி, கிருட்டிணன், சென்னை-81 ச. முத்துசாமி. சேலம். மணக்காடு ஆர். வேந்தன், சேலம்-1 அலமேலு மாணிக்கம், வ. வரதன், எம். பிச்சைமுத்து, எம். சுப்பிரமணியம், எஸ். பெருமாள், நாகப்ப நாயுடு, சென்னை-1 கே. வெங்கட்ராமன், தஞ்சை புஷ்பவள்ளி, எஸ. கிருத்திகா, செங்கை வி. குலசேகரஸ், வி. பச்சையப்பன். தெ. ஆ. பி. சீனிவாசன், குடியேற்றம் எஸ். எம். வசந்தமல்லி, தர்மபுரி எம் கந்தசாமி ஒரு உடன் பிறப்பு ஆகிய 50 பேர் ரூ 5—வீதம்	250	00
முகவை கே முனியாண்டி, தூத்துக்குடி கே சீத்தாராமன், விழுப்புரம் ஏ முருகன். குருசாமி, வ ஆ எம் பெருமாள், கிருட்டிணன், டி எம் இராம் திருப்பத்தூர் ஆர் முருகன் டி வி மகாதேவன் டி என் தனலட்சுமி டி எம் ஆறுமுகம் சின்னதம்பி, லட்சுமணன், என். சின்னசாமி, வ ஆ ஆர் கேசவன் பி மோகன், யி, இராசு, ஆர் உலகராசு, தர்மபுரி சி மாரியப்பன் வ ஆ, வி சுந்தரம், வி கஸ்தூரி, உடன்பிறப்பு, சேலம்—5 வி சோலை, வ ஆ. கே கோவிந்தசாமி சாவித்திரி, சேலம்—6. ஜி ஏ சீனிவாசன், சேலம்—1 கே முருகேசன், என் மல்லி வி இராமச் சந்திரன், சேலம்—5 வி அர்த்தனாரி, வ ஆ, பி இராமச்சந்திரன். ஆகிய 31 பேர் ரூ, 5-வீதம்	155	00
எம் இரரதாசிருஷ்ணன்.	4	75
திருச்சி சங்கர், புதுக்கோட்டை அமுதாரரகவன், கரிகாலன், சொ. கிதாராணி, தஞ்சை பி குணசேகரன், சி, எஸ். பாலசுப்பிரமணியன் முகமது அண்ட் உடன்பிறப்பு. தஞ்சை ஆர். விசுவநசதன் வி இராசேசுவரி, ஆகிய 9 பேர் ரூ. 3—வீதம்	27	00
திருச்சி வி இராமசாமி நெல்லை சிவசுப்பிரமணியம், தஞ்சை எஸ் நாகராசன் திழிச்சி சி அடைக்கலம் தெ ஆ, பி இராமகிருட்டிணன், வ ஆ ஐ டி. பாபு மாசிலாமணி, தஞ்சை டி இராமலிங்கம், சேலம், எ பழனியப்பன். கமுகுக்குடி உலகக்குடிமகன் ஆகிய 9 பேர் ரூ 2...வீதம்	18	00
கோவை இராமச்சந்திரன், சென்னை 96 கோவிந்தன் திருச்சி ப கருணநிதி ஆகிய 3 பேர் ரூ 1 – வீதம்	3	00
சென்னை 12 ஓட்டேரி மு எழுமலை	10	10
பம்பாய்-37 பலார்டு எஸ்டேட் எம் பலராமன்	50	00
பம்பாம்-60 ஜோகேஸ்வரி டி எ கமார் பீவி, பிரேம் நகர் கே. அய்ட்டுனிசா, டி. ஏ. பர்வாஞ்ச் பீவி எ மரியம்பீவி ஆர் மைமூனுபீவி திருமதிநிர்மலா பாஸ்கர் எ அபிதாபீவி எம் அல்லா பக்சு எ ரகிலாபீவி ஆர் அழகம்மாள் எஸ் ரசிமாபீவி மதன்லால் எஸ் ஆஷாபிபி பாலா சேட் ஆகிய 14 பேர் ரூ 25—வீதம்	350	00
பம்பாய்—3 பழைய பங்காலிபுரம் எம் மாரிமுத்து	11	00
பம்பாய்—1 முனிரத்தினம் அப்துல் ரகீம் முகமது யூசுப் அப்துல்சலாம் அப்துல்முத்தலீப் தமயந்தி லட்சுமி ஜரீனு சால்மா எஸ பழனிசாமி இராமசாமி எ ஆர் சம்சுதீன் கே சடையன் டி எ முகமது அனிபா லதா பாஸகர் எ அபாஸ் அலி எ முகமது இஸமாயில் டி எ முகமது காசிம் பி குமார் ஆகிய 19 பேர் ரூ 10—வீதம்	190	00
பம்பாய்-19 மாதுங்கா கே மனோகரன் ஜே எபினேசர் யு பி மணி டி சண்முகம் எ சோமு நைனு எஸ ஈ எம் கௌது ஆகிய 3 பேர் ரூ 5...வீதம்	30	00
பெங்களூர் பையரசந்தரா டாங்க் குடிசை வாசிகள்	101	00
பலராமன்	32	00
பெங்களூர்—1 ஜி காந்தி	30	00
பெங்களூர்—2 என் டி பேட் ஜி பெருமான் கஜேந்திரன்—ராசேந்திரன்—சீனிவாசன் ஆகியோர்	25	00
ஆர் செல்வராசு	25	00
பெங்களூர்—1 எஸ நாச்சிமுத்து	20	00
பெங்களூர்—53 எம் தங்கவேல் வி சுதாகரஸ் ஆகியோர் ரூ 10—மீதம்	20	00
பெங்களூர் நாகராசு வெங்கல் மணியரசி என் சடகோபன் வி பொன்னையா இராஜாஜி நகர் எஸ டேட் சி முத்துசாமி இ நடராசன் எம் எஸ அருணசலம் எம் செயராசு இராதா கிருட்டிணன் ஏ சுந்தாமி சி எம் சுப்பிரமணி என் சுப்பிரமணி கே செயவேலு டி கோவிந்தசாமி சுந்தரராசன் எ தருமலிங்கம் ஆகிய 17 பேர் ரூ 5—வீதம்	85	00
பெங்களூர் வி சண்முகம்	2	00
தஞ்சை ஆடுதுறை கோ சி மணி எம் எல் சி.	551	00
மதுரை மாவட்ட தி மு க பொருளாளர் எஸ பாண்டியன்	2000	00
வ ஆ எ ஈ புருஷோத்தமன் மதுரை கே பாண்டியன் தர்மபுரி எ முகமது சபா திருச்சி ஸடார் நிட்டிங் கம்பெனி பி சக்திவேல் பொன்மலை எல் கிருஷ்ணமூர்த்தி ஆகிய 6 பேர் ரூ 101—வீதம்	606	00
தஞ்சை மேல உளூர் ந. சுந்தரம் (25–00) சு. வெங்கடாசலம் (10–00) மே. ச. தமிழிறைவன் (25—00) வி கோவிந்தராசு (10–00) ப வேலாயுதம் (5—00) சி பரமசிவம் (5–00) ஆகியோர் மூலம்	80	00
புதுவை முத்தையா பாளையம் தமிழ்மணி	65	00
சென்னை.7 வேப்பேரி கோ. சி. நடராசன்	51	00
சேலம் பரமத்தி கே. எஸ. சீதாராமன்	50	90
திருச்சி வி. ஆர். ராக்கப்பன்	35	00
மதுரை என். இராசகோபாலன், வேலூர் எம். அபிமன்னன், கோவை கே. வேலு ஆகிய 3 பேர் ரூ.30 வீதம்	90	00
குளித்தலை எம். நாகராசன்	26	00
மதுரை எஸ நடராசன். திருச்சி உறையூர் கே. ரகீம், கூக்கல்தொறை எச்.சப்பாணி அருப்புக்கோட்டை கே. சிவராமன், இராசபாளையம் ஏ. எஸ. வேலாயுதராஜ், பொள்ளாச்சி வி.கே.ஆர். ஜவுளிக்கடை தொழிலாளர், சென்னை-3 பி. நாராயணசாமி, கூக்கல்தொறை திரு. வி. விஜயகுமார். எச். மணி கோவை ஈரோடு டி. சரோஜினி, கே. சண்முகம் ஆகிய 11 பேர் ரூ. 25 வீதம்	275	00
அரக்கோணம் எம். சி. இராமதாஸ்	22	00
கூக்கல்தொறை ஏ. டி. எஸ. ஜோகி கவுடர், சென்னை சிட்டிபாபு நினைவு மன்றம், கூக்கல்தொறை கே. ஏ. ஜோகி, ஏ. டி. எஸ. அஞ்சன், டி. இராசன், ஏ. நஞ்சன், ஜே. சந்திரன் ஆகிய 7 பேர் ரூ, 20 வீதம்	140	00
எழும்பூர் கே. எஸ். நாகலிங்கம்	19	50
பி அண்ட் சி. மில் எஸ. சண்முகம்	17	00
கோவை ஏ கனகராஜ்	16	00
சேலம், குமாரசாமி பேட்டை எஸ,பழனிசாமி, நாகப்பட்டினம் வி. காசிநாதன் உறையூர் எஸ. எம். நூர்ஜகான், சுல்தான்பேட்டை எஸ கே,வெங்கடபதி, சென்னை—24 ஈ. முருகன், கூக்கல்தொறை கே. ஆர். நஞ்சன், தருமபுரி அக்கரகாரம் ஆர். அரங்கசாமி ஆகிய 7 பேர் ரூ. 15 வீதம்	105	00
மதுரை க. கொ. லைன் எ. பழனிசாமி கூக்கல்தொறை கே. கே, ஆலன் நாகை சிந்தாமணி பிச்சனூர் பி. ஆர். ஆறுமுகம் ஆகிய 4 பேர் ரூ. 15 வீதம்	60	00
தஞ்சை எஸ. ஆனந்தன்	14	75
கோவை எஸ. கே. நாச்சிமுத்து சு. ஆறுச்சாமி பி. இரங்கசாமி பி. ஆறுமுகம் டி கே, சுப்பையன் கே. மயில்சாமி கே. அருணசலம் பி. எஸ, இராசாமணி எஸ. சண்முகம் ஆகிய 9 பேர் ரூ. 13 வீதம்	117	00
சேலம் ம. கா. புதூர் என். கைலாசம்	12	50
சென்னை பி. கிருஷ்ணன் இந்திரா நகர் எஸ. இராமள் ஆகிய 2 பேர் ரூ. 12 வீதம்	24	00
ஆக மொத்தம் ரூ...	89 456	85

கேரளத்து அரசியல் மேதையின்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் எனச் சில மந்திரிகள் கருதுகிறார்கள். என் நண்பர் டாக்டர் சுப்பராயன் தமது சகாக்களுடன் இவ்விஷயமாகப் பலமாக மாறுபடுகிறார். கிரிக்கெட் விளையாட்டை இந்திய தேசியவிளையாட்டாக கொள்ள வேண்டும் என ஆதரித்துக் கூறுகிறார்

டாக்டர் சுப்பராயன் கூறுவதை நான் முழுமனத்துடன் ஆதரிக்கிறேன். அதைப் போலவே அந்நிய மொழியாக இருப்பினும் இங்கிலிஷையே இந்தியாவுக்குப் பொது மொழியாக்க வேண்டும் என நான் கூறுவதை அவர் சம்மதித்து ஏற்றுக் கொள்வார் என நம்புகிறேன்.

ஆங்கிலம் நமது மதிப்புக்குரிய விருந்தாளி. தாய்மொழி நமது அன்னையினும் இனியது. எப்படிப்பட்ட அந்நியமொழியானாலும் அது எவ்வளவு வளர்ச்சி, கவர்ச்சி, வனப்பு பொருந்தியதாக இருப்பினும் அது சாதாரண மக்களின் மொழியாக முடியாது. இம்மாகாணத்தில் பேசப்படும் தமிழனுடையவும், மற்றைய திராவிட மொழிகளுடையவும் இடத்தை ஆங்கிலமும் பெற முடியாது. தாய்மொழி நம் தாய்மார் நம்மைத் தாலாட்டி வளர்த்தமொழி. நமது மழலைப் பருவமொழி, சிறுவர்களாக இருந்தபோது கருத்துக்கள் தெளிவடையாதிருந்த போது, எண்ணங்களை உருவாக்கி வெளியிட ஏதுவாக இருந்த மொழி,

அந்நிய மொழியிலே எவ்வளவுதான் பாண்டித்தியம் பெற்றிருந்த போதிலும் பிற்காலத்திலே காதல், அன்பு. கோபம், சோகம் முதலிய மனோபாவங்களைச் சித்தரித்துக் காட்ட உதவும் மொழி, நமது மரணப்படுக்கையில் நம் மரண வேதனையைத் தெரிவிக்கப் பயன்படும் மொழி அப்படிப்பட்ட தாய்மொழிக்கு ஈடானது வேறொன்றுமில்லை

[27–2–38 அன்று காஞ்சியில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கேரளத்து அரசியல் மேதை கிருஷ்ணன் நாயர் ஆற்றிய உரை]

பிரதிநிதி;
கே. எம். ஜி. மாதவன்,
11, புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை-4

இரத்த வெறி பிடித்த ஆர். எஸ். எஸ். !

நெருக்கடி நிலையின்போது இந்திரா காந்தி செய்த உருப்படியான காரியம் ஏதாவது ஒன்று உண்டென்றால், அது ஆர்.எஸ்.எஸ்., ஆனந்தமார்க்கம் போன்ற மதவெறிபிடித்த இயக்கங்களுக்குத்தடைவிதித்ததுதான்!

உலகம் போற்றிய உத்தமர் காந்தியின் உயிர்போக்கிய கோட்சேயை வளர்த்து ஆளாக்கி விட்ட இந்த ஆர். எஸ். எஸ். மீண்டும்அலிகாரில் தன் கைவரிசையைக் காட்டியுள்ளது. அதன் விளைவாக முப்பது பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்திருக்கிறார்கள். ஐந்து இலட்ச ரூபாய்க்குமேற்பட்ட பொருட்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

செப்டம்பர் பன்னிரண்டாம் தேதி 'புரா' என்றழைக்கப்பட்ட சுரேஷ் சந்த் சர்மா என்பவனுக்கும், ஒரு முசலிமுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதில் இருவருமே காயமடைந்தனர். மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்ட 'புரா' அக்டோபர் மாதம் ஐந்தாம் தேதி மாண்டு போனான்.

சூப்பிரிண்டண்ட் ஆஃப் போலீஸ் சதுர்வேதி நீதிபதி சிங்கால், அமர்சிங் ஆகியோர் தலைமையில் முப்பத்து மூன்று போலீஸ்காரர்கள் 'புரா'வின் சடலத்தை அறுவைக்காக (போஸ்ட் மார்ட்டம்) எடுத்துச் சென்றபோது, நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டிருந்த ஒரு கலகக்கார கும்பல் சடலத்தை போலீசாரிடமிருந்து கைப்பற்றியது.

சடலத்தை ஏற்றிச்சென்ற கலகக்கார கும்பல் வெறித்தனமான முழக்கங்களை எழுப்பியவாறே வீதிகளில் ஊர்வலம் வந்தது.

"இரத்தத்திற்குப் பதில் இரத்தம்...!"

"எங்களில் ஒருவரை அவர்கள் கொன்றால், அவர்களில் நால்வரை நாங்கள் கொல்வோம்...!"

கலகக்காரக்கும்பல்முசலீம்கள் வாழும் குடியிருப்புக்குள் நுழைந்தது: அவர்களுடைய கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன: கற்கள் சரமாரியாக வீசப்பட்டன: கலகக்கார கும்பல் சுட ஆரம்பிக்கவே, தங்களைத் தற்காத்துக்கொள்ள முசலீம்களின் தரப்பிலிருந்து சிலர் சுட்டதாகவும்சொல்லப்படுகிறது.

முதல் கலவரத்தின்போது பதினறுபேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் முசலீம்களே என்று போலீஸ் தரப்

— சாலு —

பின் அறிக்கை கூறுகிறது. 1962 ஆம்ஆண்டிலும்1971 — ஆம் ஆண்டிலும் அலிகாரில் நடந்த கலவரங்களை நினைவூட்டும் இந்தக் கலவரத்தைப் போலீசார் திறம்படச் செயலாற்றியிருந்தால் தடுத்திருக்கமுடியும். நிலைமைகட்டுக்கடங்காமல்போனபிறகுதான் அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி ஊரடங்குச் சட்டமும் போட்டிருக்கிறார்கள்.

அக்டோபர் மாதத்தோடு அலிகார் வாழ் முசுலீம் மக்களின் தெருக்களில் இரத்தம் பெருக்கெடுத்து ஓடுவதுநின்றுவிடவில்லை. மீண்டும் நவம்பர் மாதமும் பதினன்கு பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

அலிகாரில்நடந்தவன்முறைகள், தீவைப்புகள், கொலைகள் அனைத்திற்கும் மூல காரணமாக இருந்தவர்கள் ஆர்.எஸ். எஸ். இயக்கத்தாரேஎன்பதை அனைத்துக் கட்சியினரும் ஒத்துக் கொள்கின்றனர் — ஜனதாவிலிருக்கும் சிலரைத் தவிர!

"அலிகார் வன்முறைகளைத் தூண்டிவிட்டவர் கிருஷ்ண குமார் நவ்மன்என்பவர்தான். (முன்னாள் ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான இவர். இப்போது அலிகார் ஜனதாக் கட்சியின் தலைவர்). சில உயர் அதிகாரிகள்கூட இதை ஒப்புக்கொள்கிறார்கள்...ஊரடங்குச் சட்டத்தின் கீழ் அக்டோபர் எட்டாம்தேதி கைது செய்யப்பட்ட இவர் உடனடியாக ஏன் விடுதலைசெய்யப்பட்டார் என்று தெரியவில்லை..."

— இவ்வாறு கூறியுள்ள இராஜ்நாராயணன், 'அலிகாரில் நடந்த வன்முறைகளை ஆர். எஸ் எஸ். தூண்டிவிடவில்லை' என்று 'சப்பைக்கட்டு' கட்டப்பார்த்தசந்திரசேகரின் கூற்று 'மடத்தனமானது...' என்று சாடியுள்ளார்.

அலிகார்என்ற நகரமானது முசலீம் மக்களின்உயிர்வாழும் பண்பாட்டுச் சின்னமாகும் அங்கு ஏற்படும் வன்முறைகள் இந்தியா முழுக்க வாழும் முசுலீம்களை பாதிக்கக்கூடும். தொடர்ந்து வன்முறைகள் அங்கு தலைவிரித்தாடி வருகின்றன.

இம்முறை ஆர். எஸ். எஸ். முழுக்க முழுக்க இருதனிநபர் சண்டையைத் திட்டமிட்டுப் பெரிதாக்கி ஒரு மதச்சண்டையாக்கியுள்ளது.

ஆர். எஸ். எஸ். தன்னுடைய மதவெறியிலிருந்து மீண்டுவிடும் என்ற பலரின் நம்பிக்கை மீண்டும்பொய்த்து விட்டது; அதன் தலைவர்களும் சரி, தொண்டர்களும் சரி இரத்தவெறி பிடித்து அலைகின்றனர்; மதச்சார்பற்ற தன்மையிலோ, சமத்துவத்திலோ நம்பிக்கை இல்லாத ஆர். எஸ். எஸ். இந்தியாவை எதிர்நோக்கி இருக்கும் பெரிய ஆபத்துக்களில். ஒன்றாகும்;

'தொண்டர்களுக்குப் பயிற்சி தருகிறோம்' என்று சொல்லிக்கொண்டு ஆர். எஸ். எஸ். தலைவர்கள், அரசாங்க நிறுவனங்களின் மைதானங்களை ஆக்கிரமித்து, அவைகளை 'கொலைப் பயிற்சி முகாமாக. மாற்றி வருகிறார்கள்.

'ஆர். எஸ். எஸ். கொலைர பயிற்சியாளர்களுக்கு அரசாங்க இடங்களில் இனி அனுமதி இல்லை' என்ற கேரள அரசின் துணிச்சலான தீர்மானம் பாராட்டுதலுக்குரியது: இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களும் இதைப் பின்பற்றுமா?

ஆயுதம் தாங்கிப்போராடுவது, மதவெறியைத் தூண்டிவிட்டு ஆட்களைத் 'தீர்த்துகட்டுவது' போன்ற ஆர்.எஸ். எஸ சின் நடவடிக்கைகள் இந்திய ஜனநாயகத்திற்கும் ஒற்றுமைக்கும் விடப்பட்ட சவாலாகும்!

— இதை அரசின் ஒத்துழைப்போடு மக்கள் முறியடித்தே ஆகவேண்டும்.

வகுப்புக் கலவரங்கள் வாழையடி வாழை எனத் தொடருகிறது. அண்மையில் அலிகாரில் வெடித்த வகுப்புக் கலவரங்களுக்குத் தீப்பந்த வழிவகுத்தது ஆர் எஸ். எஸ். தான். ஆர், எஸ், எஸ் சின் நடவடிக்கைகளால் சிறுபான்மை இன மக்களின் சீற்றத்திற்கு ஆளாகி விட்டோம்.

— ஜனதாக் கட்சியின் பொதுச்செயலாளர்களான மோகன்சிங், கவுசல் கிஷோர்.

இந்தித் திணிப்பால் குழப்பமே விளையும்!

ஆட்சி மொழிக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு செயல்படுத்தினால், அது, உடனடியாக இந்தி தெரியாத மக்கள் மீது இந்தியைத் திணிப்பதாகும், என்பதுடன் அது பொதுவாழ்வில் பெருங் குழப்பத்தையும் உண்டுபண்ணும்!

சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் முன்னேற்றம் பெறவும் வேண்டுமானால் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருப்பதை மாற்றுமுன் நாட்டின் பொருளாதார, தொழில்துறை வளர்ச்சியைக் கணக்கிலெடுத்துக் கொண்டாக வேண்டும்.

மாநில சட்டமன்ற உறுப்பினர்கள்தாம் அந்தந்தப் பகுதி மக்களின் பிரதிநிதிகள் ஆவார்கள். அவர்கள் மூலம் மக்களின் கருத்தை – குறிப்பாக இந்தி வழங்காத பகுதி மக்களின் கருத்தை அறிந்து கொள்ளாமல், இந்தத்துறையில் எந்தநடவடிக்கையும் டெல்லி அரசு மேற்கொள்ளக்கூடாது.

வரப்போகும் நெடுநாட்களுக்கு மக்கள் சபையிலும், மாநில சட்டமன்றங்களிலும் ஆங்கிலமே வழங்கப்படவேண்டும்; இந்தி அல்லது வட்டார மொழிகளிலும் பேசலாம். மேலும் பல்கலைக்கழக மட்டத்தில் பயிற்சி மொழியாகவும் ஆங்கிலம் நெடுங்காலத்திற்கு இருந்தாக வேண்டும்.

இந்தி பயிற்சி மொழியாக வளர்ந்தாலும் சட்ட விஞ்ஞான — தொழில் நுட்பக் கல்வி எல்லாம் ஆங்கிலத்தின் மூலமே கற்பிக்கப்பட வேண்டும்.

அனைத்திந்திய சர்விசுகளுக்கான தேர்வுகளும் நெடுங்காலத்துக்கு ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படவேண்டும்.

[ஆட்சிமொழிக்குழு உறுப்பினராக இருந்து பணியாற்றியவரும், மத்திய அமைச்சராக இருந்தவருமான காலஞ்சென்ற டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள், ஆட்சிமொழிக்குழு அறிக்கையில் எழுதிய குறிப்பு]

மருத்துவரின் மறதியால் மாதுக்கு ஏற்பட்ட தொல்லை!

திருமதி சுசீலாம்மாள் என்னும் பெண்மணி பெங்களூரில் உள்ள எஸ். என். ஆர். மருந்துவமனையில் வயிற்றுவலி காரணமாக ஏப்ரல் மாதம் 19-ஆம் நாள் சேர்க்கப்பட்டார். அவருக்கு வயிற்றில் அறுவைச் சிசிச்சை செய்யப்பட்டது அப்போது அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர் மறதியாக அறுவைச் சிகிச்சைக் கருவிகளை வயிற்றுக்குள்ளே வைத்துவிட்டு அறுத்த பகுதிகளைத் தைத்துவிட்டார்.

ஒன்பது நாட்களுக்குப் பின்னால் அந்த அம்மையார் மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பினார். வீடு திரும்பிய சில மணி நேரத்துக்கெல்லாம் அந்த அம்மையாருக்கு வயிற்றுவலி தாங்க முடியவில்லை உடன் மீண்டும் அதே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு புறநோயாளியாகவே சிகிச்சை அளிக்கப்பட்டது. பதினைந்து நாட்கள் கழித்து அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்திய கத்திரிக்கோலின் உடைந்த துண்டு ஒன்றுமலம்கழிக்கும்போது வெளியே வந்ததாம் இன்னொரு பகுதி குடலிலேயே இருந்தது எக்ஸ்ரே படம் மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவரின்கவனத்திற்கு இதைக்கொண்டு வந்தபோது தாம் செய்த தவறை அவர் ஏற்கமறுத்து விட்டாராம்.

உடலுக்குள் அறுவைச் சிகிச்சைக் கருவிகளை மறதியாக வைத்து மூடிவிடுவது இதுவே முதல் நிகழ்ச்சியல்ல. இதற்கு முன்னும்இப்படிபல இடங்களில் நடந்திருக்கிறது. சில மருத்துவர்கள் சிறிது கவனக் குறைவாகக் காரியமாற்றுவது மனித உயிருக்கு எவ்வளவு பெரிய ஆபத்தை விளைவிக்கும் என்பதை உணர்ந்து முன்னெச்சரிக்கையுடன் பணியாற்ற முனைவார்களா?

நாடாளு மன்றம் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன?

இந்திரா காந்தி பிரதமராக இருந்து ஆட்சி நடத்திய பதினோரு ஆண்டு காலம் அதில் இரண்டு ஆண்டுகள் இருண்ட காலமாக நெருக்கடி நிலை உருவாக்கி விட்டது.

ஜனநாயகத்தின் அடிப்படையில் ஆட்சிக்கு வந்தவர் இந்திரா காந்தி, இருண்ட கால ஆட்சியிலே இட்லருக்கு ஈடாக சர்வாதிகாரம் புரிந்தார்.

ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தவர்களை சிறையிலே அடைத்தார்! தென் கோடியிலே ஆட்சி நடத்திய கலைஞரை ஜனநாயகத்திற்கு ஆதரவாக உரத்த குரல் கொடுத்தார் என்பதற்காக அவரது ஆட்சியைக் கலைத்தார். எண்ணற்ற அநியாயங்களை நாட்டிலே நடத்திகாட்டினார்.

வருமான வரி கட்டக்கூட தகுதியில்லாத பேர்வழி சஞ்சய் காந்தி, அவருக்கிருந்த தகுதி யெல்லாம் நாட்டின் பிரதமராக இருந்த இந்திரா காந்தியின் ஆசை மகன் என்பதுதான்.

தன் மகனை நாட்டின் முன்னோடி தொழிலதிபர்களில் ஒருவராக உருவாக்க வேண்டும் என்று இந்திரா தன் இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

"சிறு கார் தொழிற்சாலை" தொடங்கப்பட்டது. சிறிய காருக்கு மாருதி எனப் பெயர் சூட்டப்பட்டது. பிறக்காத குழந்தைக்குப் பெயர் சூட்டியது போல் இருந்தது. நாட்டில் உள்ள பெரிய தொழிலதிபர்களில் சிலர் தங்களுடைய தொழில் வளர்ச்சிக்கு பிரதமரின் ஆதரவைப் பெருக்கிட சஞ்சய் காந்தியைக் காக்காய் பிடித்தனர், மாருதிக்கு மூலதனமாக தங்களுடைய பங்காக இலட்சக் கணக்கான ரூபாயை அள்ளிக் கொடுத்தனர்

தொழிற்சாலையை நிறுவிட அரியானா மாநிலத்தைத் தேர்ந்தெடுத்தார் சஞ்சய் காந்தி! அன்றைய முதலமைச்சராக விளங்கிய பன்சிலால் மாருதி விஷயத்தில் முறைகேடாக நடந்து கொண்டார். மிகவும்குறைந்த விலைக்கு முந்நூறு ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுத்தார். அன்றைய தினம் நிலத்தின் சொந்தக்காரரை வெளியேற்ற செய்த கொடுமை கண்டு நாடே சிரித்தது; நையாண்டி செய்தது. பிரதமரின் மகன் சஞ்சய் காந்தியை தொழில் ரீதியாக ஊக்கபடுத்துவதன் மூலமாக அரசியல் இலாபம் தேடலாம் என்பதற்காக அமெரிக்கா டாலர்களை வாரி வழங்கியது

இந்திரா காந்தி இது விஷயத்தில் கண்டும் காணாது போல் நடந்து விட்டார்.

அமெரிக்காவின் செல்வாக்கு இந்தியாவில் பரவுவதைக் கண்ட சோவியத் நாடு சும்மா இருக்குமா?

லெனின்

சஞ்சய் காந்திக்கு பண நெருக்கடி ஏற்பட்டது, மாருதி மூடும் கட்டத்திற்கு வந்தது! சஞ்சயின் சிறிய கார் தயாரிப்புத் திட்டம் நிறைவேற வாய்ப்பில்லை என்று தெரிந்து கொண்டவர்கள் தங்கள் முதலீட்டுப் பணத்தை திருப்பித் தருமாறு அவரை நச்சரிக்கத் தொடங்கி விட்டார்கள்,

அமெரிக்காவைப் போல் இன்னொரு வெளி நாடும் தனக்கு உதவாதா என அவர் அலைமோதிக்கொண்டிருந்தார்!

டாலராக இருந்தாலும் ரூபிலாக இருந்தாலும் சஞ்சயைப் பொறுத்தவரை கவலையில்லை, அதன் பின்னணி எப்படி இருக்கும் என்பதைப் பற்றி கவலையில்லை. வேண்டியது பணம்.

இந்தியாவின் அன்பையும், ஆதரவையும் பெறுவதற்கு என்றும் விரும்பி நிற்கும் சோவியத் நாடு சஞ்சய்க்கு உதவிடத் தயங்கவில்லை.

மாருதி பெட்ரோல் சேவர் (MARUTHI PETROL SAVER) என்ற சஞ்சயின் முக்கிய தயாரிப்புக்காக வாங்கிப் போட்ட முதலீடுகளுக்கு கணக்கு வழக்கே இல்லை. தொடக்கத்தில் அவை ஒரு யூனிட் நூற்றுப்பத்து ரூபாய்க்கு விற்கப்பட்டன. தரம் குறைந்த அவை சந்தையில் புறக்கணிக்கப்பட்டதால் விலைகள் குறைக்கப்பட்டன.

நூற்றுப்பத்து எழுபத்தைந்தானது! நாற்பத்தைந்தானது அறுபது சதவிகிதம் குறைக்கப்பட்டும் அவற்றை வாங்க ஆள் இல்லை. இறுதியில் நூற்றுக்கு ஐந்து மட்டுமே அதுவும் கட்டாயத்தின் பேரில் — விலைபோக குவிந்து போன எஞ்சியவையெல்லாம் கிடப்பில் போய்விட்டன.

திறமைக்குப்பெயர்போன சோவியத் வாகனப் பொறி இயலாளர்கள் அவற்றை வாங்க முன் வந்தனர். சோவியத்தின் உள்நோக்கம் இதன் மூலமாக அரசியல் ஆதாயம் தேடவேண்டும் என்பதேயாகும்.

சஞ்சயின் தயாரிப்புகளை அறுபது இலட்சம் ரூபாய்க்கு கண்களை மூடிக் கொண்டு வாங்க அது தயாரானது. இந்திரா காந்தியும் தலைமை அமைச்சர் என்ற முறையில் அதற்கு ஒப்புதலும் அளித்தார்.

வியாபாரம் என்ற பெயரால் வெளிநாடுகள் ஆக்கிரமிப்புச் செய்ய அனுமதிக்கக் கூடாது என்று அவர் கூறிய உபதேசங்கள் எல்லாம் ஊருக்

(தொடர்ச்சி 9ம்– பக்கம்)



-கலைஞர் கடிதம்

(முதற் பக்கத் தொடர்ச்சி)

துக்கும் — ஏற்றுக் கொண்ட சோதனைகளுக்கும் ஈடு ஆக மாட்டா என்பது மட்டும் உண்மை! அவ்வளவு பெரிய விடுதலைச் சிங்கமாக அவர் உலவியிருக்கிறார்.

நாட்டின் மீது அவர் கொண்டிருந்த பற்றுக்கும் பாசத்திற்கும் அவர் எழுதிய பாடல் ஒன்றே சான்று பகரும்:

"திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவற நிற்கும் என் மாசிலா மனைவியே
என்னரும் உயிரினும் என்னுயிர் உள்ளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுறப் பாதியை பெரிய நம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே"

—ஆருயிர்த் துணைவிக்கு அவர் எழுதிய கவிதை மடல் இது

அந்த உறுதிவாய்ந்த நெஞ்சத்துக்கு இன்று நாம் மலர் தூவுவோம்!

அந்த வீர மறவருக்குப் புகழாஞ்சலிபாடிப் போற்றுவோம்!

அந்தத் தியாகச் செம்மலுக்கு வீரவணக்கம் செலுத்துவோம்

வாழ்க, வ. உ. சி.-யின் பெயர்!
வாழ்க, அந்த அஞ்சா நெஞ்சம்!

அன்புள்ள,
மு. க.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (156சூரியநாராயணசெட்டிதெரு. இராயபுரம் 6.00013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009